அருங்காட்சியக மலர்

(ஏப்ரல் - ஜூன், 1997.)

தஞ்சாவூர் (தற்காலம்) தர்பார் கிருஷ்ணர்

வெளியிடுபவர்

கண். தீனதயாளன், இ.ஆ.ப.,
அருங்காட்சியகங்களின் ஆணையர்,
அரசு அருங்காட்சியகம். சென்னை-8.
15. ஜூலை, 1997

245

அருங்காட்சியக மலர்

(ஏப்ரல் – ஜூன், 1977)

தொகுப்பாசிரியர்

முனைவர் நே. தேவசகாயம்
துணை இயக்குநர்

முனைவர் வே. ஜெயராஜ்
காப்பாட்சியர், வேதியியப் பாதுகாப்பு

புதிய தொடர்ச்சி – பொதுப் பகுதி – மலர் –1, இதழ் – 2, 1997.

©
அருங்காட்சியகங்களின் ஆணையர்

வெளியிடுபவர்

திரு. கண். தீனதயாளன், இ.ஆ.ப.,
அருங்காட்சியகங்களின் ஆணையர்,
அரசு அருங்காட்சியகம், சென்னை 600 008.
ஜூலை, 1997.

பொருளடக்கம்

ஆணையரின் நேருக்கு நேர் iii

தொகுப்பாசிரியர்கள் உரை v

செய்திப் பகுதி

சிறப்பு நிகழ்ச்சிகள் 1

புதிய சேர்க்கைகள் 1

வேதியியப் பாதுகாப்புப் பணிகள் 4

காட்சிக் கூடங்கள் வடிவமைத்தலும், புதுப்பித்தலும் 5

கண்காட்சிக்கு உதவிகள் 6

பயணங்கள், பயிற்சிகள் 7

பயிற்சிகள் 10

கருத்தரங்குகள், பயிலரங்குகள், மாநாடுகள் நடத்துதல், பங்கு பெறுதல் 13

திங்கள் சொற்பொழிவுகள், சிறப்புச் சொற்பொழிவுகள், வானொலி உரைகள் 15

கண்காட்சிகள் 18

ஆராய்ச்சிக்கு உதவிகள் 19

ஆராய்ச்சித் திட்டங்கள் 21

வெளியீடுகள் 22

ஆய்வுக் கட்டுரைகள் 23

வல்லுநர் கூட்டத்தில் பங்கு பெறுதல் 24

அலுவலர் பணிமாற்றங்கள் 24

கல்விப் பணிகள் 25

முக்கிய பிரமுகர்கள் வருகை 25

வருங்கால நிகழ்வுகள் 26

கட்டுரைப் பகுதி

சென்னை அருங்காட்சியகத்தில் மூன்று சிறந்த
நடராசர் செப்புத் திருமேனிகள்
- இரா. பாலசுப்ரமணியன் 28

ரோமானிய திருநிலைப்பாடு நாணயங்கள் - ஒப்பீடு
- இரா. சாந்தி 30

தே.பி. ராய் சௌத்ரியின் ஓவியச் சேகரிப்புகள்
- ம. மோகன் 34

அமிர்தி யானையின் எலும்புக்கூடு
- பா. ஜவகர் 36

டைனோசார்களும் அருங்காட்சியகங்களும்
- ஜா.ரா. அசோகன் 38

கன்னியாகுமரி அருங்காட்சியகத்திலுள்ள செப்புத் திருமேனிகள்
- நா. சௌந்திரபாண்டியன் 40

திருநெல்வேலி அருங்காட்சியகத்தில் ஓவியக் கண்காட்சி
- சே. கிருஷ்ணம்மாள் 45

சென்னை அரசு அருங்காட்சியகம் ஆராய்ச்சி மையமாகிறது
- முனைவர் சே. தேவசகாயம் 47

புகைப்படப் பகுதி

முனைவர் மு. **தமிழ்க்குடிமகன்,**
எம்.ஏ., பி.எச்.டி.,
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு,
இந்து சமயம் மற்றும்
அறநிலையத் துறை அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.

நாள் : 12.7.97

வாழ்த்து

தமிழ்ப் பண்பாட்டுத் துறை சார்ந்த அருங்காட்சியகம் இன்று சிறப்பாக இயங்கி வருகின்றது. இரண்டாம் பகுதித் திட்டத்தின் கீழ் பெற்ற நிதியை முறையாகப் பயன்படுத்திப் பல சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அந்த வகையில் அருங்காட்சியகம் தன் பணிகளை முன் வைத்து மலரொன்று வெளியிடுவது பாராட்டுக்குரியது. பணி சிறக்க வாழ்த்துகிறேன்.

(மு. தமிழ்க்குடிமகன்)

வை. பழனிச்சாமி, இ.ஆ.ப.,
அரசு செயலாளர்,
தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை - 600 009.

நாள் : 9.7.1997

வாழ்த்துரை

சென்னை மாநகருக்கு புகழ் சேர்க்கும் வகையில் கடந்த சுமார் 150 ஆண்டுகளாக வெற்றிப் பாதையில் நடைபோட்டு வரும் சென்னை அருங்காட்சியகம் "காலாண்டு அருங்காட்சியக மலர்" வெளியிடுவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழக முதல்வர், முத்தமிழ் அறிஞர், கலைஞர் அவர்களின் தலைமையில் அனைத்துத் துறைகளிலும் நடைபெற்றுவரும் முன்னேற்றத் திட்டங்கள் அனைத்திலும் அருங்காட்சியகத் துறை 1997-98 ஆம் நிதியாண்டில் இரண்டாம் பகுதி திட்டத்தின் கீழ் இதற்கு முன் எந்த ஆண்டிலும் இல்லாத அளவுக்கு ரூ. 78.85 இலட்சம் ஒதுக்கி தமிழகத்திலுள்ள எல்லா மாவட்டங்களிலும் அருங்காட்சியகங்களை அமைக்க வேண்டும் என்று திட்டமிட்டு பழனி, திருவாரூர், சிவகங்கை ஆகிய மூன்று மாவட்டங்களில் புதிய அருங்காட்சியகங்கள், அருங்காட்சியகத்திற்கென புதிய கட்டடங்கள் கட்டுதல், அருங்காட்சியகக் காட்சியமைப்புகளைப் புதுப்பித்தல் போன்ற புதிய திட்டங்களுடன் அருங்காட்சியகத் துறை முன்னேற்றம் கண்டு வருகிறது. சென்னை அருங்காட்சியகம் புதிய வசதிகளைப் பெற்று, சென்னை வாழ் மக்களுக்கும், இவ்வருங்காட்சியகத்தைப் பார்வையிட வரும் அனைவருக்கும் நல்ல படிப்பினையை வழங்கும் நோக்கத்தில் வரும் ஆண்டுகளில் சென்னை அருங்காட்சியகம் சர்வதேசத்தரம் வாய்ந்த அருங்காட்சியகமாக உயரும் நிலையை எண்ணிப் பார்க்கிறேன். இத்தகைய திட்டப் பணிகளையெல்லாம் செயல்படுத்தி சென்னை அருங்காட்சியகம் தொடர்ந்து தொண்டாற்றி வரவும், அருங்காட்சியக மலர் தொடர்ந்து மணம் பரப்பவும் என் இதயபூர்வமான வாழ்த்துக்களை உரித்தாக்குகிறேன்.

(வை. பழனிச்சாமி)

ஆணையரின் நேருக்கு நேர் . . .

அன்புடையீர்,

அரசு அருங்காட்சியகத்துறையின் பணிகள் சீரிய முறையில் வளர்ந்து வருவது யாவரும் அறிந்ததே. சென்னை அரசு அருங்காட்சியகத்தில் பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்கு அரசின் நிதி பெற்று பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. காட்சிக் கூடங்கள் புத்தாக்கம் பெறுகின்றன. சுற்றுப்புறச் சூழல் அழகும் தூய்மையும் பெற்று மிளிர உள்ளது.

பழநி, திருவாரூர், சிவகங்கை, ஆகிய அருங்காட்சியகங்களுக்கான கட்டடங்கள் தேர்வு செய்யப்பட்டு அருங்காட்சியக அமைப்புப் பணிகள் தீவிரமாக நடைபெற்று, வருகின்றன. கோவையில் அருங்காட்சியகம் புதிய கட்டிடத்தில் குடியேற உள்ளது. திருச்சி, திருநெல்வேலி மற்றும் வேலூர் அருங்காட்சியகங்களும் விரைவில் புதிய, வசதியான கட்டடங்களுக்கு மாற்றப்பட உள்ளன. மாவட்டங்களில் கண்காட்சிகள், கருத்தரங்கங்கள் பல நடைபெற்றுள்ளன. புதுகல்வி பண்பாட்டு வள பயிற்சி மையம் ஆசிரியர்களுக்காக நடத்திய ***"கல்விப் பணியில் அருங்காட்சியகங்கள்"*** என்ற பயிலரங்கில் சென்னை அருங்காட்சியகக் காப்பாட்சியர்களும் பணியாளர்களும் ஆற்றிய பங்கு நிறைவளிக்கிறது. பங்கு பெற்ற ஆசிரியர்கள் இந்தியாவின் பல பகுதிகளில் பணியாற்றுகிறார்கள். நமது பண்பாட்டுச் செல்வங்கள் வழங்கும் தகவல்கள் நிச்சயமாக பங்கு பெற்ற ஆசிரியர்கள் மூலமாக நமது மாணவச் செல்வங்களை அடையும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

ஜூன் திங்களில் இருபெரும் பயிற்சிகள் ஒரு மாத காலத்திற்கு நடந்துள்ளன. பாரதி மகளிர்க் கல்லூரி விலங்கியல் துறை இரண்டாம் ஆண்டு மாணவிகள் 29 பேர் விலங்கியல் மற்றும் தாவரவியல் பிரிவுகளில் நடத்தப்பட்ட ***உயிரினங்களைப் பதப்படுத்தும் பயிற்சி***யில் பங்கு கொண்டனர். இதுமட்டுமின்றி பல்வேறு நிறுவனங்களிலிருந்து 6 பேரும் பயிற்சி பெற்றனர். வேதியியப் பாதுகாப்புப் பிரிவில் நடைபெற்ற ***"அரும்பொருட்கள் பாதுகாப்பு"*** பயிற்சியில் 11 பேர் பங்கு பெற்றனர். இவர்கள் நமது கலைச் செல்வங்களைப் பாதுகாப்பதில் ஈடுபடுவோம் என்று கூறி விடை பெற்றது திருப்தியளிக்கிறது.

ஏறத்தாழ 150 ஆண்டுகளாக ஆய்வுப் பணியில் ஈடுபட்டுவரும் சென்னை அரசு அருங்காட்சியகம் சென்னைப் பல்கலைக் கழகத்தால் ஆய்வு நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது மிக்க மகிழ்ச்சிக் குறியதாயினும், பல ஆன்றோர்களின்

நீண்ட கால வேட்கை தற்போதுதான் தணிந்துள்ளது என்பதும் சுட்டிக்காட்டப் பட வேண்டியதாகும். பல்கலைக் கழக துணை வேந்தர் முனைவர் பி.கே. பொன்னுசாமி அவர்களுக்கும் சிண்டிகேட் உறுப்பினர்களுக்கும் நமது நன்றி உரித்தாகட்டும். சென்னை அரசு அருங்காட்சியகம் ஒரு பன்னாட்டு சிறப்பு மிக்க அருங்காட்சியகமாகத் திகழ எடுக்கப்படும் நடவடிக்கைகள் அனைத்தும் கைகூடி வருகின்றன. அருங்காட்சியக மலர் இன்னும் பல்வேறு சிறந்த தகவல்களையும் கட்டுரைகளையும் தாங்கி வருகிறது. இந்தக் காலாண்டு மலர் மேலும் வண்ணமும் வாசமும் பெற தங்களது சீரிய கருத்துக்களை வரவேற்கிறேன்.

(கண். தீனதயாளன்)

தொகுப்பாசிரியர்கள் உரை

இருபக்கமாக வெளிவந்த செய்திமலர் சில ஆண்டுகளாக வெளிவராமலிருந்தது. பின்னர் 1995 இல் ஓராண்டுச் செய்தி மலராக வெளிவந்தது. பின்னர் அதனைத் தொடர்ந்து ஜுன் 1996 வரை அடுத்த ஓராண்டு மலர் வெளிவந்தது. பின்னர் இன்றைய ஆணையர் திரு. கண். தீனதயாளன், இ.ஆ.ப., அவர்களது ஆலோசனையின் பேரில் காலாண்டுச் செய்தி மலராக வெளியிடப்பட்டு வந்தது. ஜுன் திங்கள் வெளியிடப்பட்ட மலர் அருங்காட்சியக மலராக மலர்ந்தது. அதில் காப்பாட்சியர்களின் கட்டுரைப் பகுதியும் இடம் பெற்றது. இம்மலரில் தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறைச் செயலாளர் திரு. வை. பழனிச்சாமி, இ.ஆ.ப., அவர்களின் வாழ்த்துச் செய்தி இடம் பெற்றிருப்பது எங்களுக்கு பெருமகிழ்ச்சியைக் கொடுக்கிறது. அருங்காட்சியக மலர் ஆங்கிலத்திலும் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆய்வுக்கட்டுரைகள், புதிய சேகரிப்புகள் பற்றிய குறிப்புகள், அருங்காட்சியகவியல் தொடர்பான செய்திகள் பெரிதும் எதிர்பார்க்கப் படுகின்றன. அனுப்பி வைக்கப்படும் கட்டுரைகளைப் வெளியிட முடியாத சூழலில் அவை அடுத்த இதழில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும். அடிக்குறிப்புகளுடன் ஆய்வுக்கட்டுரைகளை எதிர் நோக்குகிறோம்.

அருங்காட்சியக மலர் வெளியிடுவதில் அரசு அருங்காட்சியகங்களின் ஆணையர் திரு. கண். தீனதயாளன், இ.ஆ.ப., அவர்களின் உற்சாகமும் ஆலோசனைகளும் எங்களை உற்சாக மூட்டுகின்றன. அடுத்து வரும் மலருக்கான அருங்காட்சியகத் தொடர்பான கட்டுரைகளை முன்கூட்டியே படத்துடன் இரண்டு வரி இடைவெளியுடன் தட்டச்சு செய்து அனுப்பிட வேண்டுகிறோம். செய்தி மலருக்கான செய்தியை அக்டோபர் 3 ஆம் நாளுக்குள் அனுப்பி வைத்தால் மிக வசதியாக இருக்கும்.

இம்மலர் வெளிவர தொகுப்பில் பெரிதும் உதவிய கல்விப் பிரிவு காப்பாட்சியர் திருமதி. அ. பிரேமா தீபராணி அவர்களுக்கும், கட்டுரைகள், செய்திகள் ஏற்ற வேளையில் அனுப்பிய அனைத்துக் காப்பாட்சியர்கள் மற்றும் அலுவலக நண்பர்களுக்கும், புகைப்படங்கள் தயாரித்துக் கொடுத்த புகைப்படப் பிரிவு நண்பர்களுக்கும், அச்சுப் பணியில் உதவிய அச்சக நண்பர்களுக்கும், சீராக்ஸ் பணியில் உதவிய அன்பர்களுக்கும், மேஜை பதிப்பகம் மூலம் அச்சிட்டு கொடுத்த கிரியேட்டர்ஸ் நிறுவனத்தாருக்கும் அருங்காட்சியக மலர் வெளிவர பல்வேறு வகைகளிலும் உதவி புரிந்த அனைத்து அன்பர்களுக்கும் நன்றியை உரித்தாக்குகிறோம்.

அன்புடன்,

சென்னை 8. (முனைவர் நே. தேவசகாயம்)

நாள் : 10.7.97. (முனைவர் வே. ஜெயராஜ்)

செய்திப் பகுதி

சிறப்பு நிகழ்ச்சிகள்

சென்னை

ஜுன் 2 ஆம் நாள் சென்னை அருங்காட்சியகக் கலையரங்கில் அரசு அருங்காட்சியகமும், பாரதி மகளிர்க் கல்லூரியும் இணைந்து நடத்திய ***"உயிரினங்களைப் பதப்படுத்துதல் பயிற்சி"*** மற்றும், ***"அரும்பொருட்கள் பாதுகாத்தல்"; "புத்தாக்கம் பெற்ற சிறுவர் அருங்காட்சியகம்"*** ஆகியவை தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறைச் செயலாளர், திரு. வை. பழனிச்சாமி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் அருங்காட்சியகங்களின் ஆணையர், திரு. கண். தீனதயாளன், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்க, மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் அறநிலையத்துறை அமைச்சர், மாண்புமிகு முனைவர். மு. தமிழ்க்குடிமகன் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. ஆறு நூல்கள் வெளியிடப்பட்டன.

புதிய சேர்க்கைகள்

சென்னை

தொல்பொருள் பிரிவு

திருவாரூர் வட்டம், ஆய்க்குடி கிராமத்திலிருந்து பார்வதி, திருஞான சம்பந்தர் மற்றும் பாலகிருட்டிணர், பாதங்கள் உள்ள அடிபீடம் ஒன்றும், தரங்கம்பாடி வட்டாட்சியரிடமிருந்து சந்திரசேகரர், சூலத்தில் உடைந்த பகுதிகளும் புதைபொருட்களாகப் பெறப்பட்டன .

மானிடவியல் பிரிவு

5.5.97 அன்று ஈரோடு மாவட்டத்திலிருந்து முனைவர் வே. ஜெயராஜ் அவர்களால் பெறப்பட்ட இரும்பு கால வண்ணப் பானை ஓடுகள் 10 சேகரிப்பில் சேர்க்கப்பட்டன.

23.5.97 அன்று திருமதி. கவுரி ராஜகோபால் ஹரிகதா காலட்சேபக் கலைஞர், சென்னை அவர்களிடமிருந்து பழங்கால தம்புரா ஒன்று அன்பளிப்பாகப் பெற்றுக் கொள்ளப்பட்டது.

நாணயவியல்

7 ரோமானிய நாணயங்கள் மற்றும் உடைந்த ஒரு வெள்ளி நாணயம், அகமலை கிராமம், உத்தமபாளையம் வட்டம், மதுரை மாவட்டத்திலிருந்தும், 228 செப்பு கிழக்கிந்திய கம்பெனி நாணயங்கள் பூசாரி பட்டி கிராமம், ஓமலூர் வட்டம், சேலம் மாவட்டத்திலிருந்தும், 11 முதல் நாள் உறைகள், 11 செய்தி

மடல்கள், 13 சிறப்புத் தபால் தலைகள் சென்னை தலைமை அஞ்சல் அலுவலரிடமிருந்தும் பெறப்பட்டன. ஆஸ்திரேலியா சிறப்பு காகித பணம் (10 $ மதிப்பு) மருத்துவர் திரு. பி.ஜி. சின்ன கிருஷ்ணன், தேனாம்பேட்டை அவர்களிடமிருந்து இலவசமாக பெறப்பட்டன.

விலங்கியல்

உலர் நிலையில் பதப்படுத்தப்பட்ட நில ஆமை (Geochelone gigantea) ஒன்று சென்னை பாம்புப் பூங்காவிலிருந்து 9.5.97 அன்று பெறப்பட்டது.

தாவரவியல் பிரிவு

லக்னோவில் உள்ள "பீர்பால் சாஹானி இன்ஸ்டியூட் ஆப் பேலியோ பாட்டனி" நிறுவனத்தினடமிருந்து எட்டு தாவரப் புதைப் படிவங்களும், கன்னியாகுமரி, முட்டம் மற்றும் திருச்செந்தூரிலிருந்து கடல் வாழ் தாவரங்களும் சேகரிக்கப்பட்டன.

புவியியல்

தமிழ்நாடு கனிம நிறுவனத்திடமிருந்து (TAMIN) ஒன்பது பல வண்ணக் கற்கள், புவியியல் பிரிவுக்கு அன்பளிப்பாகக் கிடைக்கப் பெற்றன.

வேதியியப் பாதுகாப்புப் பிரிவு காப்பாட்சியர் முனைவர் வே. ஜெயராஜ் ஈரோடு மாவட்டம், கொடுமணல் என்ற இடத்திலிருந்து சேகரித்த மூன்று புவியியல் பொருட்களும் புவியியல் பிரிவில் சேர்க்கப்பட்டன.

கல்விப் பிரிவு

வீடியோ பிலிம் ஒன்று மீடியா கன்சல்டென்ட் நிறுவனத்திடமிருந்து வாங்கப்பட்டது.

புதுக்கோட்டை

1. டெல்லி தேசிய அருங்காட்சியகத்திலிருந்து (சென்னை அருங்காட்சியகம் வாயிலாக) 120 பாரிசுச்சாந்து மாதிரிச் சிற்பங்கள் பெறப்பட்டன.

2. தாவர வகைகள் 25 சேகரிக்கப்பட்டன.

மதுரை

புனுகுப்பூனை, உடலில் நாமம் போட்ட ராமர் பூனை பதப்படுத்தப் பட்டது. இசைக்கருவிகளின் புகைப்படங்கள், வானாதிராயர் நாணயங்கள் 5, சுந்தரபாண்டியர் நாணயங்கள் 6, 4 சுல்தானியர் நாணயங்கள் சேகரித்து, சுத்தம்

செய்து காட்சிக்கு வைக்கப்பட்டன. மதுரை அழகர் கோயில் பொய்கைக் கரைப்பட்டி மற்றும் வள்ளாலப்பட்டி கிராமங்களில் சுடுமண் பொம்மைகள், சுடுமண் தலைகள் சேகரிக்கப்பட்டன. தாய்த் தெய்வங்களின் புகைப்படங்கள் சேகரிக்கப்பட்டன.

திருச்சி

நல்ல பாம்பு ஒன்று பதப்படுத்தப்பட்டது. 11 அஞ்சல் தலைகளும் விளக்கவுறைகளும் அன்பளிப்பாகப் பெறப்பட்டன. தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனத்திடமிருந்து 8 தொல்லுயிர்ப் படிவங்கள் பெறப்பட்டன.

வேலூர்

மூன்று உலோக கலைப் பொருட்கள், (சீயாலம், வந்தவாசி வட்டம், திருவண்ணாமலை மாவட்டம்). ஒரு வார்ப்பு மாரியம் மன், பிற்காலப் பல்லவர் அம்மிக்கல், (அப்புக்கல் கிராமம்) இரண்டு பறவைகளின் கூடுகள், கிடைக்கப் பெற்றன. 9 இந்திய அஞ்சல் உறைகள், இரட்டை நாடா சிமினி ஒன்றும், இங்கிலாந்தில் செய்யப்பட்ட இரண்டு பீங்கான் தட்டுகள், திரு. விஜயன் அவர்களிடமிருந்து ஒரு இந்திய அஞ்சல் அட்டையும் முன்பு விடபட்ட 9 இந்திய அஞ்சல் அட்டைகளும் அன்பளிப்பாக பெறப்பட்டன.

உதகை

1. புகிரி (இருளர்) இசைக்கருவி, அக்கபக்க (படுகர்) மரத்தின் ஒரு பகுதி, க்வாலு (இருளர்) இசைக்கருவி, அரைக்கும் கல்லின் ஒரு பகுதி ஆகியவை சேகரிக்கப்பட்டன.

கோவை

திரு. இராமமூர்த்தி என்பவரிடமிருந்து லினோ அச்சு ஒட்டப்பட்ட ஆந்தைப் படம் ஒன்றும் அஞ்சல் துறையிடமிருந்து முதல் நாள் அஞ்சல் உறைகள் பத்தும், அஞ்சல் வில்லைகள் பன்னிரெண்டும் அன்பளிப்பாக பெறப்பட்டன. பட்டணம் பகுதியிலிருந்து ஒரு நடுகல்லும், ஒரு கல்கூட்டும் சேகரிக்கப்பட்டன.

கடலூர்

11.6.97 அன்று ஆணையன்பேட்டையிலிருந்து இரும்பு காலத் தாழிகள், மட்பாண்டங்கள், கோடாரிகள், கத்திகள் ஆகியவை புதைப்பொருட்களாகக் கிடைத்தன.

கன்னியாகுமரி

புதுடெல்லி தேசிய அருங்காட்சியகத்திலிருந்து பெறப்பட்ட சிந்துச் சமவெளி 'பிளாஸ்டர் காஸ்ட்' மாதிரிகள் 120 எண்ணிக்கை பெறப்பட்டு சேகரிப்பில் சேர்க்கப்பட்டன.

மதுரை தலைமைத் தபால் நிலைய அலுவலரிடமிருந்து 15 முதல் நாள் தபால் உறைகளும், விளக்க அட்டைகளும் பெறப்பட்டன.

சூரிய உதயத்துடன் கூடிய விவேகானந்தர் பாறை சுவரொட்டி மாவட்ட சுற்றுலா அலுவலம் மூலம் பெறப்பட்டது.

திருநெல்வேலி

முதல் நாள் உறைகள், அஞ்சல் தலைகள் தலைமை அஞ்சலக அலுவலரிடமிருந்தும், பாளையங்கோட்டையைச் சேர்ந்த திரு. அருளப்பன் என்பவரிடமிருந்து பனை ஓலைச் சுவடிகளும் அஞ்சறைப் பெட்டியும் சேகரிக்கப்பட்டன.

கிருட்டிணகிரி

ஓசூர் வட்டம், சூளகிரி கிராமத்திலிருந்து 3 நடுகற்களும், நாயக்கர் கால ஐந்து செப்பு நாணயங்களும், 10 வண்ணத்துப் பூச்சிகளும் சேகரிக்கப்பட்டன. மூன்று முதல் நாள் அஞ்சல் உறைகள் மற்றும் கையேடுகள் அஞ்சல் துறையினரிடமிருந்து இலவசமாக பெறப்பட்டன.

வேதியியப் பாதுகாப்புப் பணிகள்

12 படிமங்கள், 10 மரச்சிற்பங்கள், 9 கற்சிற்பங்கள், 735 செப்பு நாணயங்கள், 80 வெள்ளி நாணயங்கள், 7 செப்புத் தகடு புடைப்புச் சிற்பங்கள், 2 தஞ்சாவூர் பலகை ஓவியங்கள், 22 மானிடவியல் பொருட்கள், 11 கொண்டப்பள்ளி பொம்மைகள், 2 துணி ஓவியங்கள், 1 ஓலைச்சுவடிக்கட்டு ஆகியவை சென்னை அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்பட்டன. மதுரை அருங்காட்சியகத்தில் 7 படிமங்கள், 13 செப்புப் பாத்திரங்கள், 2 கட்டு பனை ஓலைச்சுவடிகள், 10 செப்பு நாணயங்கள், 2 மட்பானைகள், ஒரு தஞ்சாவூர் ஓவியம், 3 கற்சிற்பங்கள், 11 தோல் பாவைகள் சீர்செய்யப்பட்டு பாதுகாக்கப்பட்டன.

திரு. தமணிக்கு ஒரு தஞ்சாவூர் ஓவியமும், பாரதி மகளிர் கல்லூரிக்கு 13 நினைவுப் பொருட்களும் தகுந்த முறையில் சீர் செய்யப்பட்டு பாதுகாத்து கொடுக்கப்பட்டன.

ஊர்வன கூடத்தில் நான்கு கடல் ஆமைகளுக்கும், பாலூட்டிகள் கூடத்தில் மர நாய்கள் இரண்டு மற்றும் கடல் சிங்கம், கரடி ஆகியவற்றிற்கும் வேதியியப்

பாதுகாப்பளித்துக் காட்சிக்கு வைக்கப்பட்டன. வேலூரில் அமிர்தி விலங்ககத்தில் இறந்த சிறுத்தைப் புலியின் தோல்பதப்படுத்தப்பட்டது.

காட்சிக் கூடங்கள் வடிவமைத்தலும் புதுப்பித்தலும்

சென்னை

மானிடவியல் பிரிவு

வரலாற்றுக்கு முந்திய கால காட்சிப் பெட்டிகள் அமைக்கும் பணி செய்யப்பட்டு வருகிறது.

தாவரவியல் பிரிவு

வகைப்பாட்டுத் தாவரவியற் கூடத்தில் காட்சிப் பெட்டிகளைப் புதுப்பிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புவியியல் பிரிவு

புவியியல் பிரிவின் முதல் தளத்தில் 18 நவீன காட்சிப் பெட்டிகள் மூலம் சீரமைக்கும் பணி செய்யப்பட்டு வருகிறது.

சிறுவர் அருங்காட்சியகம்

சிறுவர் அருங்காட்சியகத்தின் தளப்பகுதியிலுள்ள 11 நாகரிகக் காட்சிப் பெட்டிகளும், முதல் தளத்தில் 12 அறிவியல் காட்சிப் பெட்டிகளும், மற்றும் செயற்கை கோள் செலுத்து வாகனங்கள், தொலைக் கட்டுப்பாட்டு மாதிரிகளும் காட்சியிலமைக்கப்பட்டன. அடித்தளத்தில் பறக்கும் ரயில் மாதிரியும், 1861 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் தயாரிக்கப்பட்ட கொலம்பியல் புரூம்பார்ம் இயந்திர மாதிரியும் காட்சிக்கு வைக்கப்பட்டன. கட்டடம் உட்புறம் வர்ணம் பூசப்பட்டு புத்தாக்கம் செய்யப்பட்டது.

வடிவமைப்பு பிரிவு

5.4.97 அன்று சேலம் மாவட்ட அருங்காட்சியகத்தில் கண்ணாடி இழை நார்களாலான டினோசாரஸ் மாதிரி உருவம் 15 அடி உயரத்தில் அமைக்கப்பட்டது.

மானிடவியல் கட்டடத்தில் 26 காட்சிப் பெட்டிகள் அமைத்தல், 6 கட்டடங்களுக்கும் பிளாஸ்டிக் எழுத்துக்கள் பொருத்துதல், அருங்காட்சியக வாரவிழா தொடர்பான பணிகள், கிருட்டிணகிரி, கடலூர் கையேடுகள், மேஜைப் பதிப்பகம் மற்றும் அச்சகத்தின் மூலம் வெளியிடுதல் முதலியவை வடிவமைப்புப் பிரிவால் கவனிக்கப்பட்டன.

புதுக்கோட்டை

கலை, கைவினைப் பொருட்கள், ஓவியங்கள் மற்றும் மரச்சிற்பங்கள் காட்சிக் கூடங்கள் நவீனப்படுத்தப்பட்டு, காட்சிப் பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன.

மதுரை

தோற்பாவைகள் கண்ணாடிப் பெட்டி தயார் செய்து காட்சிக்கு வைக்கப்பட்டது.

கன்னியாகுமரி

முன் நுழைவு வாயிலில் "பிளாஸ்டர் காஸ்ட்" காளி சிலை ஒன்று வைக்கப்பட்டது.

திருநெல்வேலி

புதிதாகப் பெறப்பட்ட கற்சிற்பங்கள் மற்றும், முதுமக்கள் தாழி வைப்பதற்கு மரத்தாங்கிகள் செய்து பொருத்தப்பட்டன.

கண்காட்சிக்கு உதவிகள்

சென்னை

மானிடவியல் பிரிவு

திப்பு சுல்தான் தொடர்பான துப்பாக்கிகளின் புகைப்படங்கள் ஈரோட்டில் நடைபெற்ற திப்புசுல்தான் கண்காட்சியில் இடம் பெற்றன.

நாணயவியல் பிரிவு

ஈரோட்டில் நடை பெற்ற திப்பு சுல்தான் கண்காட்சியில் நாணயங்களின் நிழற்படங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன.

வேதியியப் பாதுகாப்புப் பிரிவு

அண்ணா நகர் எஸ்.பி.ஓ.ஏ. பள்ளி ஆசிரியர்களுக்கு அரும்பொருட்கள் பாதுகாப்பு தொடர்பான புகைப்படங்கள் கொடுக்கப்பட்டு, திரும்பப் பெறப்பட்டன.

மதுரை

27.6.97, 28.6.97 மதுரை வி.எம்.ஜே. மேல்நிலைப்பள்ளியில் வரலாறு, பண்பாடு, நாகரிகம் பற்றி மாணவர்களின் சிறப்புக் கண்காட்சிக்கு உதவப்பட்டது.

மதுரை பாரத வங்கி அலுவலர் சங்கப் பள்ளி கண்காட்சிக்கு சுவடிகள் மற்றும், எழுத்தாணிகள் கொடுத்துத் திரும்பப் பெறப்பட்டன.

பயணங்கள், பயிற்சிகள்

ஆணையர்

திரு. கண். தீனதயாளன், இ.ஆ.ப.,

4.5.97 ஈரோடு அருங்காட்சியகத்தில் ***"திப்பு சுல்தான்"*** கருத்தரங்கில் தலைமை வகித்தார்.

9.5.97 மயிலாடுதுறையில் ஏ.வி.சி. கல்லூரியில் உள்ள அருங்காட்சியகத்தை பார்வையிட்டு பேராசிரியர்களுடன் கலந்துரையாடல் நடத்தினார்.

7.6.97 கோவை அருங்காட்சியகத்தைப் பார்வையிட்டு அருங்காட்சியகம் இடம் மாற்றம் குறித்து மாவட்ட ஆட்சியருடன் பேசினார்.

9.6.97 பழனி அருங்காட்சியகத்திற்கான கட்டடத்தைப் பார்வையிட்டார்.

27.6.97 சென்னையில் ***"உயிரினங்களைப் பதப்படுத்தும் பயிற்சி"***, ***"அரும்பொருட்களின் பாதுகாப்பு புத்தொளிப் பயிற்சி"*** ஆகியவற்றின் நிறைவு விழாவில் தலைமையேற்றுப் பேசினார்.

துணை இயக்குநர்

முனைவர் நே. தேவசகாயம்

15.4.97, 16.4.97 புதுதில்லியில் நடைபெற்ற இந்திய அருங்காட்சியகங்களின் இயக்குநர்கள் மாநாட்டில் கலந்து கொண்டார்.

11.6.97 திருவாரூர் அருங்காட்சியகத்திற்கு இடம் பார்வையிட திருவாரூர் பயணம் மேற்கொண்டார்.

13.6.97 செங்கல்பட்டு மாவட்டம் தீரூர் என்ற இடத்திற்கு ஆய்வுப் பயணம் மேற்கொண்டார்.

தொல்பொருள் பிரிவு

25.5.97 காப்பாட்சியர் ***"கல்விப் பணியில் அருங்காட்சியகங்களின் பங்கு"*** என்ற பயிலரங்கில் பங்கு கொண்ட ஆசிரியர்களுக்கு காஞ்சிபுரம் கோயில்களைப் பற்றி விளக்கிக் கூறினார்.

21.6.97 காப்பாட்சியர் படிம மாதிரிகள் செய்து விற்பனையில் வைப்பது தொடர்பாக சுவாமி மலை, நாச்சியார் கோவில் சென்று வந்தார்.

25.6.97 முதல் *28.6.97* வரை, காப்பாட்சியர் ஈரோடு, கோவை மற்றும் உதகை அருங்காட்சியகங்களுக்கு பயணம் மேற்கொண்டு மரச்சிற்பங்களை ஆய்வு செய்தார்.

நாணயவியல் பிரிவு

4.5.97 காப்பாட்சியர் ஈரோடு, திப்புவின் ஆய்வரங்கில் கட்டுரை படித்தார்.

வேதியியப் பாதுகாப்புப் பிரிவு

4.5.97 காப்பாட்சியர் ஈரோடு, திப்புவின் ஆய்வரங்கில் கட்டுரை படித்தார்.

5.5.97 கொடுமணல் அகழாய்வு பார்வையிட்டு பொருட்கள் சேகரித்தார்.

23.6.97 தஞ்சாவூர் பயணம் மேற்கொண்டு படிமங்களின் தொழில் நுட்பம் மற்றும் பாதிப்பு பற்றிய ஆய்வு மேற்கொண்டார்.

மதுரை

10.4.97 மாவட்டக் கலை மன்றம் சம்பந்தமான கூட்டத்தில் கலந்து கொள்ள காப்பாட்சியர் திண்டுக்கல் பயணம்.

25.4.97 காப்பாட்சியர் உசிலம்பட்டி அருகில் முதலைக் குளம் கிராமத்தில் கிடைத்த புதை பொருள் பற்றி ஆய்வு செய்யப் பயணம்.

16.6.97 மதுரை மாவட்டம் உசிலம்பட்டிக்கு பயணம் மேற்கொண்டு வட்டாட்சியரைச் சந்தித்து ஐம்பொன்சிலைகளை ஆய்வு செய்தார்.

மதுரை அழகர்கோயில் வெள்ளாளப்பட்டி பொய்கைக் கரைபட்டி கிராமங்களுக்கு பயணம் மேற்கொள்ளப்பட்டு சுடுமண் பொம்மைகள் சேகரிக்கப்பட்டன.

19.6.97 சிவகங்கை மாவட்டம் சென்று அருங்காட்சியகம் அமைக்க இடம் தேர்வு செய்ய உதவினார்.

திருச்சி

24.4.97 & 28.4.97 : காப்பாட்சியர், கீழூர் மற்றும் புகலூர் ஆய்வுப் பயணம்.

11.6.97, 16.6.97 : காப்பாட்சியர், திருவாரூர் அருங்காட்சியக அமைப்புப் பணிகளுக்காக பயணம்.

கோவை

25.4.97 காப்பாட்சியர் சில உதிரிச் சிற்பங்கள் பெறுதல் தொடர்பாக

பொள்ளாச்சிக்கு பயணம் மேற்கொண்டார்.

29.4.97 'பட்டணம், கிணற்றுக்கடவு ஆகிய இடங்களுக்கு ஆய்வுப் பயணம் மேற்கொண்டார்.

கடலூர்

காப்பாட்சியர், கடலூரிலிருந்து 20 கி.மீ. தொலைவில் உள்ள ஆணையன்பேட்டை என்னும் இடத்திற்கு தாழிகள், மட்பாண்டங்கள், கத்திகள், கோடாரிகள் சேகரிக்கப் பயணம் மேற்கொண்டார்.

17.6.97 கே.என். பேட்டையில் உள்ள கற்சிலையை ஆய்வு செய்தார்.

கன்னியாகுமரி

7.4.97, 10.4.97, 11.4.97: சென்னை பயணம் மேற்கொண்டு சிந்து சமவெளி குறித்த பிளாஸ்டர் காஸ்ட் மாதிரிகள் பெறப்பட்டன.

20.4.97 நாகர்கோவில் மாவட்டாட்சியர் அலுவலகம் பயணம் மேற்கொண்டு பள்ளியாடி, திருவிதாங்கோடு, அகஸ்தீஸ்வரம் பீரங்கி பெறுவது சம்பந்தமாக மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் அவர்களை சந்தித்தார்.

20.4.97 திருநெல்வேலி அரசு அருங்காட்சியகத்திற்கு பயணம் மேற்கொண்டு கூடுதல் பணியேற்கும் பணி கவனிக்கப்பட்டது.

4.6.97 பத்மனாபபுரம் அரண்மனை மற்றும் அருங்காட்சியகம் பயணம் மேற்கொண்டு கற்சிற்பங்கள், ஓவியங்கள், கட்டடங்கள், கல்வெட்டுக்கள், செப்புப் பட்டயங்களை ஆய்வு செய்தார்.

கிருட்டிணகிரி

காப்பாட்சியர், தருமபுரி மாவட்டத்திலுள்ள பாறை ஓவியங்கள் பார்வையிடப் பயணம் மேற்கொண்டார்.

9.6.97 ஊத்தங்கரை வட்டம், கல்லாவி அருகில் மல்லாபுரம் உதிரிச் சிற்பங்களைப் பார்வையிடப் பயணம்.

12.6.97 கிருட்டிணகிரி வட்டம் பீமாண்டப் பள்ளி நடுகற்களைப் பார்வையிடப் பயணம்.

திருநெல்வேலி

29.4.97 காப்பாட்சியர், சாலைப்புதூர் கிராமத்தில் உள்ள கற்சிலை ஆய்வு செய்தார்.

9.5.97 திருச்செந்தூர் வட்டத்தில் புத்தர் சிலையை ஆய்வு.

29.5.97 அம்பாசமுத்திரம் வட்டாட்சியர் அலுவலகத்தில் அரியநாயகிபுரம் அணைக்கட்டுப் பகுதியில் கிடைத்த தங்க ஆபரணங்களின் ஆய்வு.

29.5.97 சிவகிரி வட்டத்தில் கிணற்றுக் கல்வெட்டுக்களை படியெடுத்து வந்தார்.

பயிற்சிகள்

சென்னை

(7.5.97 30.5.97) சென்னை கிருத்துவக் கல்லூரி இளங்கலை வரலாறு (தொழில்) பிரி வு மாணவ மாணவியர்களுக்கு அனைத்து பிரிவுகளிலும் பயிற்சி கொடுக்கப்பட்டது.

விலங்கியல் பிரிவு

(7.4.97 12.4.97) மயிலாடுதுறை ஏ.வி.சி. கல்லூரி, விலங்கியல் துறை முதுஅறிவியல் மற்றும் இளம் அறிவியல் மாணவர்கள் 8 பேர்களுக்கு விலங்கினங்களைப் பதப்படுத்தும் பயிற்சி நடத்தப்பட்டது.

விலங்கியல் மற்றும் தாவரவியல் பிரிவுகள் (2.6.97 - 30.6.97)

பாரதி மகளிர்க் கல்லூரி இளம் அறிவியல் விலங்கியல் பிரிவு (VOC) மாணவியர்கள் 29 பேர்களுக்கும், பிற நிறுவனங்களைச் சேர்ந்த ஆறுபேர்களுக்கும் உயிரினங்களைப் பதப்படுத்துதல், தாவரங்களைப் பதப்படுத்துதல் பயிற்சி நடத்தப்பட்டது.

வேதியியப் பாதுகாப்பு பிரிவு

10, 11.4.97 மதுரை அருங்காட்சியகத்தில் கல்லூரி மாணவர்களுக்காக ***"அரும்பொருட்கள் பாதுகாப்பு"*** ப் பயிற்சி (மதுரை அருங்காட்சியகம்).

ஜூன், 2-30, 1997. 23வது ***"அரும்பொருட்கள் பாதுகாப்பு"*** புத்தொளிப் பயிற்சி தேசிய அளவில் நடத்தப்பட்டது.11 பேர் கலந்து கொண்டனர்.

சேலம்

இந்திய விடுதலை பொன்விழாவையொட்டி 'இந்திய பண்பாடு என்பது பற்றிய குறுகிய கால பயிற்சி வகுப்பு தொடங்கப்பட்டு அது நடைபெற்று வருகிறது.

மதுரை

10.4.97, 11.4.97 ***"அரும்பொருள் பாதுகாப்பு"*** பயிற்சி சென்னை அரசு அருங்காட்சியக வேதியியல் காப்பாட்சியர் முனைவர் வே. ஜெயராஜ், மற்றும் ஆய்வக உதவியாளர் திரு. ஜே.டி. ஜெகநாதன் மூலம் கொடுக்கப்பட்டது.

28.4.97 முதல் ஒரு மாத காலம்: கோடைக் கால பயிற்சி மதுரை காந்தி நினைவு அருங்காட்சியகம், அரசு இசைக் கல்லூரி ஆகியவற்றுடன் இணைந்து நடத்தியது. இதில் பல்வேறு கலைகள் பயிற்றுவிக்கப்பட்டன.

வேலூர்

19.4.97 24.4.97 : கோடை, இலவச ஓவியப் பயிற்சி, வடார்க்காடு ஓவியர் சங்கம், வேலூர் ஸ்ரீபுற்று மகரிஷி சமூக மருத்துவ சேவா மையம் இணைந்து நடத்தப்பட்டது.

1. திரு. சு. இராசவேலு - திருபாற்கடல், திருகரபுரிஸ்வரர்
2. திரு. ஜி. திருமூர்த்தி - பெருஞ்காஞ்சி சிவன் கோயில்
3. திரு. ம. காந்தி - கழனிப்பாக்கம் பீமீஸ்வரர்
4. திரு. மா. கலைவாணன் - மேல் விஷாரம் சிவன் கோயில்
5. முனைவர் வே. ஜெயராஜ் - வேதியியல் முறையில் கோயில்களைப் பாதுகாத்தல்
6. திரு. ப. காசிலிங்கம், திரு. துரைசாமி - மடவாளம் அங்ககாரீஸ்வரர் கோயில்
7. திரு. மா. சந்திரமூர்த்தி - வளையாத்து வளவ நாதீஸ்வரர்
8. திரு. பூபாலன் - திருவலம் வில்வநாதீஸ்வரர்
9. திரு. கே. குமார் - பெருவளையம் சிவன் கோயில்
10. திரு. ப. வெங்கடேசன் - வேலூர் மாவட்ட சுவடழிந்த சமணக் கோயில்கள்
11. திரு. து. துளசிராமன் - வேலூர் மாவட்ட இஸ்லாமிய கட்டடக்கலை
12. முனைவர் நீலவன் - வேலூரில் கிறித்தவ ஆலயங்கள்
13. திரு. அனந்தபுரம் - கோ. கிருட்டிணமூர்த்தி வ.ஆ.அ.மா. சமணக் கோயில்கள்
14. திரு. மி.ஜ. இளங்கோவன் - நெவ்வாய் பெருமாள் கோயில்

15. திரு. செல்வராஜ் - திருப்பத்தூர் சிவன் கோயில்

ஈரோடு

திப்புவின் 198 வது நினைவு நாளான மே, 4-ஆம் நாள் அரசு அருங்காட்சியகம், சித்தார்த்தா பள்ளி, கொங்கு நாணயவியல் ஆய்வு மையம், கலை மகள் கல்வி நிலையம், மற்றும் இன்டாக் ஆகிய நிறுவனங்கள் இணைந்து நடத்திய *"திப்பு சுல்தான் நினைவுக் கருத்தரங்கம்* மற்றும் *கண்காட்சி"* யினை அருங்காட்சியகங்களின் ஆணையர் திரு. கண். தீனதயாளன், இ.ஆ.ப., அவர்கள் தலைமை வகித்து தொடங்கி வைத்தார். கருத்தரங்கில் பல்வேறு ஆய்வுக் கட்டுரைகள் படிக்கப்பட்டன.

கடலூர்

12.5.97 26.5.97 : கோடை ஓவியப் பயிற்சி நடத்தப்பட்டது.

சென்னை

7.4.97 முதல் 11.4.97 வரை: ஏ.வி.சி. கல்லூரி, மயிலாடுதுறையில் உயிரினங்களை பதப்படுத்துதல் துவக்க விழா, நிறைவு விழாவில் பங்கேற்றல்

7.5.97 சென்னை தாம்பரம் கிருத்துவக் கல்லூரி இளங்கலை (வரலாறு) மாணவர்களுக்கு வரலாற்றுக்கு முற்பட்ட தொல்லியல் பற்றி பயிற்றுவிக்கப்பட்டது.

*17.5.97 தமிழ் நாடு தொல்லியல் துறை ஈரோட்டில் நடத்திய கல்வெட்டுப் பயிற்சியில் கலந்து கொண்டு **"வரலாற்றுக்கு முற்பட்ட தொல்லியல்"** என்ற பாடம் நடத்தினார்.*

*18.5.97 -26.5.97 : பண்பாட்டு வள பயிற்சி மையம் நடத்திய **"கல்விப் பணியில் அருங்காட்சியகங்களின் பங்கு"** என்ற பயிலரங்கில் ஆசிரியர் களுக்குப் பாடம் நடத்தினார்.*

20.5.97 பயிற்சியில் கலந்து கொண்ட ஆசிரியர்களுக்கு மானிடவியல் பிரிவில் உரை".

2.6.97 உயிரினங்களை பதப்படுத்தும் பயிற்சியின் தொடக்க விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

4.6.97 வேதியியப் பாதுகாப்புப் பிரிவில் பயிற்சியாளர்களுக்கு அரும்பொருட்கள் பாதுகாத்தல் பற்றி உரையாற்றினார்.

25.6.97 "விலங்கினங்களைப் பதப்படுத்துதல்" பயிற்சியாளர்களுக்கு உரையாற்றினார்.

27.6.97 பயிற்சி நிறைவு விழாவில் வரவேற்புரை வழங்கினார்.

30.6.97 பயிற்சியாளர்களின் கலை நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளப்பட்டது.

தமிழ் ஆட்சிமொழி, தமிழ் பண்பாடு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர், செயலருடன் அருங்காட்சியக வளாகம் பார்வையிட்டு, "*தமிழ் வளாகம்*" அமைக்க இடம் தேர்ந்தெடுக்கப்பட்டது.

மானிடவியல் பிரிவு

முனைவர் நே. தேவசகாயம்

ஜூன் 2-30 : வேதியியப் பாதுகாப்புப் பிரிவில் நடைபெற்ற புத்தொளிப் பயிற்சியில் திரு. பக்கிரிசாமி பயிற்சி பெற்றார்.

வடிவமைப்புப் பிரிவு

1.6.97 - 15.6.97 : உயிரினங்களை பாதுகாக்கும் பயிற்சியில் கலந்து கொண்ட மாணவர்களுக்கு மாதிரி உருவங்களை செய்யும் முறை பயிற்றுவிக்கப்பட்டது.

கருத்தரங்குகள், பயிலரங்குகள், மாநாடுகள் நடத்துதல், பங்கு பெறுதல்

சென்னை

முனைவர் நே. **தேவசகாயம்**, துணை இயக்குநர்

23.4.97 துணை இயக்குநர் சி.பி. கலை மையம் நடத்திய "*பாரம்பரியச் சொத்துக்கள் பாதுகாப்பு*" கூட்டத்தில் பங்கேற்றார்.

திருமதி. **இரா. சாந்தி**, நாணயவியல் பிரிவுக் காப்பாட்சியர்

4.5.97 ஈரோடு திப்பு சுல்தான் கருத்தரங்கில் "***திப்பு சுல்தானின் அரும்பொருட்கள்***" என்ற தலைப்பில் கட்டுரை வழங்கப்பட்டது.

முனைவர். **வே. ஜெயராஜ்**, வேதியியப் பாதுகாப்புப் பிரிவு, காப்பாட்சியர்

4.5.97 ஈரோட்டில் திப்பு சுல்தான் ஆய்வரங்கில் பங்கேற்று "**திப்பு சுல்தானின் நூலகம்**" என்ற தலைப்பில் கட்டுரை படித்தார்.

17.5.97 "**அருங்காட்சியகங்கள் கல்வி மையங்கள்**" என்ற தலைப்பில் புதுதில்லி பண்பாட்டு வள பயிற்சி மையம் மூலமாக நடைபெற்ற ஆசிரியர்களுக்கான பயிலரங்கில் உரையாற்றினார்.

26.5.97 ஆசிரியர்களுக்கான பயிலரங்கு விவாதத்தில் கலந்து விளக்கமளித்தார்.

31.5.97 ***"கோயில்களில் வேதியியப் பாதுகாப்பு"*** என்ற கட்டுரை ***"கலை வளர்த்த கோயில்கள்"*** என்ற வேலூர் அருங்காட்சியகக் கருத்தரங்கிற்கு அனுப்பப்பட்டு, படிக்கப்பட்டது.

திருமதி. **ம.ந. புஷ்பா**, தாவரவியல் காப்பாட்சியர்.

18.5.97 **"அருங்காட்சியகத் தொடர்பும், காட்சியமைப்பு முறைகளும்"** என்ற தலைப்பில் புதுதில்லி பண்பாட்டு வள பயிற்சி மையம் மூலமாக நடைபெற்ற ஆசிரியர்களுக்கான பயிலரங்கில் உரையாற்றினார்.

26.5.97 ஆசிரியர்களின் பயிலரங்கு விவாதத்தில் கலந்து விளக்கமளித்தார்.

திரு. **பா. ஜவஹர்**, விலங்கியல் பிரிவு காப்பாட்சியர்.

19.5.97 ***"பள்ளியில் அருங்காட்சியகம் அமைத்தல்"*** என்ற தலைப்பில் ஆசிரியர்களுக்கான பயிலரங்கில் உரையாற்றினார்.

26.5.97 விவாதத்தில் கலந்து கொண்டு விளக்கம் கொடுத்தார்.

திரு. **ஜா.ரா. அசோகன்**, வடிவமைப்புப் பிரிவு காப்பாட்சியர்

18.5.97 முதல் 20.5.97 வரை : அறிவியல் மையத்தில் நடைபெற்ற ***"பல்நோக்கு அருங்காட்சியகங்களிலிருந்து கல்வி உபகரணங்கள்"*** என்ற பயிலரங்கத்தில் கலந்து கொண்டார்.

சேலம்

திரு. **க. இலட்சுமி நாராயணன்**, காப்பாட்சியர்

4.5.97 ஈரோடு திப்புவின் கருத்தரங்கில் ***"திப்புவின் சமயக் கொள்கை"*** என்ற தலைப்பில் கட்டுரை படித்தார்.

மே, 1997 முதல் வாரம் ***"டைனோசரஸ் கவியரங்கம்"***

ஜுன் 1, 1997 ***"மனித நேயம் காப்போம்"*** கருத்தரங்கு

ஜுன் 20, 1997 ***"கவியரசு கண்ணதாசனும் இலக்கியமும்"*** என்ற கருத்தரங்கு.

திருச்சி

17.4.97 உணர்ச்சிக் கவிஞர் **சிங்காரவேலன் - எங்கும் எதிலும் தமிழ்.** தலைமை திரு. **சாமிமுத்து**, முதல்வர் (ஓய்வு).

30.5.97 திரு. **கி. ஸ்ரீதரன்,** பதிவு அலுவலர், குடமுழுக்குப் பெறவிருக்கும் ***தடப்புகழ் தஞ்சை பெரிய கோயில் எனும் உரை.*** தலைமை திரு. **க. இராசநாயகம்,** இணை ஆணையர், இந்து சமய அறநிலையத் துறை.

30.6.97 திரு. **இரா. இரவீந்திரன்,** பாரத மிகு மின் நிறுவன ஊழியர் துறை மேலாளர் - ***விநாயகத்தத்துவ விளக்கம்*** எனும் உரை. முன்னிலை திரு. க. இராசலிங்கம்

வேலூர்

31.5.97 வேலூர் மாவட்ட "***கலை வளர்த்த திருக்கோயில்கள் கருத்தரங்கம் - 2***" நடைபெற்றது. கருத்தரங்கில் கீழ்க்கண்ட ஆய்வுக் கட்டுரைகள் படிக்கப்பட்டன.

திங்கள் சொற்பொழிவுகள், சிறப்புச் சொற்பொழிவுகள், வானொலி உரைகள்

திருமதி. *ம.ந. புஷ்பா,* தாவரவியல் பிரிவு காப்பாட்சியர்

17.6.97 வேதியியப் பாதுகாப்பு பிரிவில் பயிற்சி மாணவர்களுக்கு "***தாவரவியல் சேகரிப்புகள் ஓர் அறிமுகம்***" என்ற உரை.

திரு. ***இரா. பாலசுப்பிரமணியன்,*** தொல்பொருள் பிரிவு காப்பாட்சியர்

15.5.97 சென்னை கிருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு பிரிவின் கலைப் பொருட்களைப் பற்றிய உரை.

10.6.97 வேதியியப் பாதுகாப்பு பயிற்சியாளர்களுக்கு "***தொல்பொருள் சேகரிப்புகள்***" என்ற உரை.

திருமதி. ***இரா. சாந்தி,*** நாணயவியல் காப்பாட்சியர்

6.4.97 சென்னை அருங்காட்சியகம், பண்பாட்டுசென்னை நாணயவியல் கழகம் இணைந்து நடத்திய விழாவில் முனைவர் சார்லஸ் ரிச்சர்ட் விடேக்கர் "***ரோமானிய கலாச்சாரத்தின் சமூக பொருளாதார வரலாறு***" என்ற உரையாற்றினார்.

17.6.97 "***நாணயச் சேகரிப்புகள்***" பற்றி அரும்பொருட்கள் பாதுகாப்பு பயிற்சியாளர்களுக்கு உரை.

திரு. *ம. மோகன்,* கலைப்பிரிவு காப்பாட்சியர்.

5.6.97 வேதியியப் பாதுகாப்பு பயிற்சியாளர்களுக்கு ஓவியச் சேகரிப்புகள் பற்றிய அறிமுக உரை கொடுக்கப்பட்டது.

திரு. *பா. ஜவஹர்,* விலங்கியல் பிரிவு காப்பாட்சியர்

அரும்பொருட் பாதுகாப்பு பயிற்சியாளர்களுக்கு உரையாற்றினார்.

திரு. **தே. ஜவஹர் பிரசாத் ராஜ்,** புவியியல் பாதுகாப்புப் பிரிவு காப்பாட்சியர்

வேதியியப் பாதுகாப்பு பயிற்சியாளர்களுக்கு ***"புவியியல் சேகரிப்புகள்"*** என்ற உரை.

முனைவர் **வே. ஜெயராஜ்,** வேதியியப் பாதுகாப்புப் பிரிவு காப்பாட்சியர்.

17.5.97 ***"அரும்பொருட்களின் வகைகளும் பாதுகாப்பு முறைகளும்"*** சென்னை கிறித்தவக் கல்லூரி மாணவர்க்கு செயலாக்க உரை

17.5.97 ***"அருங்காட்சியகங்கள் கல்வி மையங்கள்"*** பண்பாட்டு வள பயிற்சி மையம் மூலம் நடை பெற்ற பயிலரங்கில் ஆசிரியர்களுக்கான உரை.

21.5.97 ***"உலோக அரும்பொருட்களின் தன்மைகளும் அவற்றின் வேதியிய உலோகவியல் தொடர்பான பாதுகாப்பும்"*** என்ற தலைப்பில் கல்பாக்கம், இந்திராகாந்தி அணு ஆய்வு மைய விஞ்ஞானிகளுக்கு உரை.

25.6.97 அண்ணா பல்கலைக் கழகத்தில் ***"அரும்பொருட்களின் பகுப்பாய்வுக் கருவிகள்"*** என்ற உரை.

"அரும்பொருட் பாதுகாப்பு" பயிற்சியாளர்களுக்கு பல்வேறு உரைகள்.

திருமதி ***அ. பிரேமா தீபராணி,*** கல்விப் பிரிவு காப்பாட்சியர்.

23.6.97 வேதியியப் பாதுகாப்புப் பிரிவில் பயிற்சியாளர்களுக்கு ***"கல்விப் பணிகள்"*** என்ற உரை.

திரு. ***ஜா.ரா. அசோகன்,*** வடிவமைப்பு பிரிவு, காப்பாட்சியர்

25.6.97 வேதியியப் பாதுகாப்புப் பிரிவு பயிற்சியாளர்களுக்கு ***காட்சிப் பொருட்களைக் காட்சிக்கு அமைக்கும் விதம்*** பற்றி உரை.

புதுக்கோட்டை

திரு. **ஜெ. ராஜா முகமது**, காப்பாட்சியர்

14.5.97 ***தமிழக பாரம்பரிய பெட்டகங்கள் - திருமயம் கோட்டை*** - என்ற தலைப்பில் திருச்சி வானொலி நிலையத்திலிருந்து ஆய்வுரை நிகழ்த்தினார்.

மதுரை

9.5.97 பேராசிரியர், முனைவர் **சக்திவேல்** "***வரலாற்று நோக்கில் மதுரை மேற்கு வாசல்***" என்ற தலைப்பில் மாதாந்திர விரிவுரை.

13.6.97 முனைவர் **காந்திதாசன்**, வரலாற்றுத் துறை பேராசிரியர், எஸ்.வி.என். கல்லூரி நாகமலை "***மதுரையில் கிடைத்த வரலாற்றுச் சான்றுகள்***" பற்றி உரை.

வேலூர்

திரு. ம. **காந்தி**, காப்பாட்சியர்

குடியாத்தம் ஊராட்சி துவக்கப் பள்ளி மாணவ மாணவியருக்கு அருங்காட்சியகத்தைப் பற்றி உரையாற்றினார்.

திரு. *மா. குணசேகரன்* ***இயற்கையின் இனிமை*** என்ற தலைப்பில் உரை.

உதகை

முனைவர் **சி.மகேசுவரன்**, காப்பாட்சியர்

1. சி.பி.ஆர். நிறுவனத்தினரால் பொங்காபுரத்தில் நடத்தப்பட்ட சுற்றுச் சூழல் விழிப்புணர்ச்சி பயிற்சி முகாமில் "***பழங்குடியினரது மூலிகை மருத்துவம்***" என்ற தலைப்பில் உரை.

2. உதக மண்டலம் வானொலி நிலையத்தில் "***நடுகற்களின் பன்முக மாட்சி***" என்ற தலைப்பில் உரைச் சித்திரம் இடம் பெற்றது.

கன்னியாகுமரி

திரு. **நா. சௌந்தரபாண்டியன்**, காப்பாட்சியர்

"***செப்புத் திருமேனி***" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்.

திருநெல்வேலி மாநில தமிழ்ச் சங்கம் தனித் தமிழ் இலக்கிய கழகம் ஏற்பாடு செய்திருந்த ***"வட்டாரத் தமிழ்"*** கருத்தரங்கில் கலந்து கொண்டு ***"மதுரைத் தமிழ்"*** என்ற தலைப்பில் சொற்பொழிவாற் றினார்.

கண்காட்சிகள்

சென்னை

கலைப்பிரிவு

சென்னை அருங்காட்சியகமும், திரு. **பி.எல்.** நரசிம்மமூர்த்தி மற்றும் திருமதி **பி. விஜயலட்சுமியும்** இணைந்து ***"இராமாயணக் கண்காட்சி"*** நடத்தப்பட்டது.

தாவரவியல் பிரிவு

2.6.97 - 30.6.97 ***"குறிஞ்சிப் பாட்டின் பூ வகைகள்"*** -சிறப்புக் கண்காட்சி

வேதியியப் பாதுகாப்புப் பிரிவு

27.6.97 ***"அரும்பொருட்கள் பாதுகாப்பு"*** -சிறப்புக் கண்காட்சி

புதுக்கோட்டை

9.6.97-20.7.97 ***"மரச்சிற்பங்கள்"*** -சிறப்புக் கண்காட்சி

மதுரை

27.5.97-30.5.97 : கோடைக்கால பயிற்சியில் எடுக்கப்பட்ட புகைப்படங்களும், செய்யப்பட்ட பொம்மைகளும் காட்சிக்கு வைக்கப்பட்டன.

26.5.97-1.6.97 : மதுரை இறையியல் கல்லூரியுடன் இணைந்து ***"தலித் ஓவியக் கண்காட்சி"*** நடைபெற்றது. எழுத்தாளர் திரு. இந்திரன் கண்காட்சியைத் தொடங்கி வைத்தார்.

வேலூர்

1. ***"அப்புக்கல்லில் இரண்டு அம்மிக்கற்கள்"*** - சிறப்புக் கண்காட்சி
2. இரட்டை நாடா சிமினி மற்றும் இங்கிலாந்தின் இரண்டு பீங்கான் தட்டுகள் சிறப்புக் கண்காட்சி.

ஈரோடு

2.5.97 ***"திப்பு சுல்தான்"*** கண்காட்சி சங்கீதா ஷாப்பிங் சென்டர் உரிமையாளரால் திறந்து வைக்கப்பட்டது.

உதகை

திங்கள் காட்சிப் பொருள் ***" குறும்பர் புகிரி"***

கன்னியாகுமரி

சிந்துச் சமவெளி பிளாஸ்டர் உருவ மாதிரிகள் கண்காட்சியில் வைக்கப்பட்டன.

திருநெல்வேலி

20.6.97 - 25.6.97 ***" தஞ்சை ஓவியங்கள்"*** - திருமதி. வசந்தலட்சுமி.

மானிடவியல் மற்றும் நாணயவியல் பிரிவுகள்

ஈரோட்டில் நடைபெற்ற 'திப்பு சுல்தான் கருத்தரங்கை ஒட்டி நடைபெற்ற "***திப்பு சுல்தானின் அரும்பொருட்கள்***" என்ற கண்காட்சியில் பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன.

போட்டிகள்

மதுரை

மதுரை இறையியல் கல்லூரி நடத்திய ***"சாதிச் சண்டைகள் தீரும் வழி"*** எனும் தலைப்பில் கட்டுரைப் போட்டி நடத்தி பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

ஆராய்ச்சிக்கு உதவிகள்

சென்னை

தொல்பொருள் பிரிவு

1. திரு. ஜெயச்சந்திரன் - நடராசர் படிமங்கள்
2. திரு. டோமினிக் ஐசக், கலிபோர்னியா - படிமங்கள்.
3. திருமதி. ரேணுகா சஹானே, பூனா - காஞ்சி புத்தர், நாகை மைத்ரேயர்.
4. முனைவர் சி.டி. டோர்ஜி மற்றும் டோர்ஜி நாம் கியாவ், பூடான் - கலைப் பொருட்கள்.
5. திரு. சந்தியாலட்சுமி, சென்னை - சோமாஸ் கந்தர்.
6. திரு. அரவிந்த் சஹானே, மும்பை - நடராசர்.
7. திரு. வி.எம். அனந்தநாராயணன், திருச்சி - சோழர் கலை.

8. திருமதி. திசியானா லாமி, இத்தாலி - காவேரிப்பாக்கம், லட்சுமி.

9. திரு. இராஜவேலு, இந்திய தொல்பொருள் கழகம் - படிமங்கள்.

10. திரு. ஜான்லிஞ்ச், அமெரிக்கா - புத்தர் படிமங்கள்.

மானிடவியல் பிரிவு

1. திரு. ரெம்ன்வினித், திருமதி. ஜுலியட் ரோபர், ஜெர்மனி - இசைக்கருவிகள்.

2. திருமதி. ப்ருந்தா ஸ்ரீகாந்த், சென்னை - கொண்டபள்ளிப் பொம்மைகள்.

3. திருமதி மதுக்காகிருஷ்ணா - ஆதிச்சநல்லூர் இரும்பு காலப் பொருட்கள்.

4. திருமதி. வி. சந்தியா லட்சுமி, சென்னை - தஞ்சை ஆயுதச் சாலை ஆயுதங்கள்.

5. திரு. எஸ். சண்முகம், சென்னை - மணிலா போர்ச்சின்னம்.

6. திரு. சசிசேகரன், ஆராய்ச்சியாளர், சென்னை பல்கலைக் கழகம் - ஆதிச்ச நல்லூர் இரும்பு கால பொருட்கள்.

தாவரவியல் பிரிவு

திரு. பிரதீப், சென்னை - வேம்பு, பூண்டு, ஓமம் மற்றும் தூதுவளைப் பற்றிய மருத்துவப் பயன்கள்.

வேதியியப் பாதுகாப்பு பிரிவு

1. திரு. இராதாகிருஷ்ணன், நாசிக் - நாணயங்களின் பாதுகாப்பு.

2. எஸ்.பி.ஓ.ஏ. பள்ளி ஆசிரியர்கள் - வேதியியப் பாதுகாப்பு

3. திருமதி. பிரியா நாக்பால் - ஓவியங்கள் பாதுகாப்பு

4. திருமதி. சரிகா கமலஹாஸன் - உடையலங்காரம்

கல்விப் பிரிவு

1. லயோலாக் கல்லூரி மாணவர்கள்

2. திருமதி சந்தியாலட்சுமி, சென்னை சி.பி. கலை மையத்தின் ஆய்வாளர்.

3. ஸ்டெல்லா மேரிக் கல்லூரி மாணவிகள்

ஈரோடு

10.4.97 கல்லூரிப் பேராசிரியர் ஜோதி பாக்யம், பொறையூர்.

28.6.97 திரு. இரா. பாலசுப்பிரமணியன், சென்னை மரச்சிற்பங்கள்.

கோவை

29.6.97 திரு. இரா. பாலசுப்பிரமணியன், காப்பாட்சியர், தொல்லியல் பிரிவு, சென்னை - மரச்சிற்பங்கள்.

திருநெல்வேலி

செல்வி பவானி, செல்வி மீரா, புனித இக்னேஷியஸ் ஆசிரியர் பயிற்சி பள்ளி மாணவிகள் - முது மக்கள் தாழி பற்றிய ஆய்வு.

மதுரை

செல்வி ஜே. காத்ரின், செல்வி ஸ்ரீவித்யா டோக் பெருமாட்டி கல்லூரி, மதுரை ஆய்வு மாணவிகள் - அருங்காட்சியக நிர்வாக முறை.

திருமதி சபிதா, "ஆய்வாளர் நாட்டிய மரபுகள்".

கன்னியாகுமரி

காது கேளாதோர் மற்றும் ஊமைப் பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் பத்து ஆசிரிய பெருமக்களின் ஆய்விற்கு அருங்காட்சியகத்தைப் பற்றி தேவையான குறிப்புகள் கொடுக்கப்பட்டன.

ஆராய்ச்சித் திட்டங்கள்

சென்னை

வேதியியப் பாதுகாப்பு மற்றும் தொல்பொருளியல் பிரிவுகள்

1. படிமங்களின் கைரேகை பதிவு செய்தல் இந்திராகாந்தி அணு ஆய்வு மையத்துடன் இணைந்து.
2. படிமங்களை முப்பரிமாணப் புகைப்படம் எடுத்தல் - அண்ணா பல்கலைக் கழகத்துடன்
3. படிமங்களின் பாதுகாப்பு - இந்திராகாந்தி அணு ஆய்வு மையத்துடன் இணைந்து (வேதியியப் பாதுகாப்பு, கலைப் பிரிவுகள்).

வேதியியப் பாதுகாப்பு மற்றும் கலைப் பிரிவுகள்

தேசிய கலைக்கூடம் பராமரிப்பு - சென்னை. இந்திய தொழில் நுட்ப கழகத்துடன் இணைந்து.

முனைவர் **வே. ஜெயராஜ்**, வேதியியப் பாதுகாப்புப் பிரிவு காப்பாட்சியர்

தமிழக அருங்காட்சியகங்களிலுள்ள அருங்காட்சியகப் பொருட்களின் பாதுகாப்பு நிலைகள் ஆய்வு

திரு. **இரா. பாலசுப்பிரமணியன்**, தொல்பொருள் பிரிவு காப்பாட்சியர்

"தமிழக அரசு அருங்காட்சியகங்களிலுள்ள மரச்சிற்பங்களைத் தொகுத்தல்" நேரு அறக்கட்டளை நிதியுதவியுடன்.

திரு. **ஜா.ரா. அசோகன்**, காப்பாட்சியர், வடிவமைப்புப் பிரிவு

"அருங்காட்சியகக் காட்சியமைப்பில் ஒப்புமை ஆய்வு" நேரு அறக்கட்டளை நிதியுதவியுடன்.

திரு. **நா. சுலைமான்**, காப்பாட்சியர், மதுரை

மதுரை நாயக்கர் கால ஓவியங்கள், முனைவர் பட்டத்திற்கான ஆய்வு.

தமிழகத்தில் சமணமதம் பொது ஆய்வு.

திரு. **ஜெ. இராஜாமுகமது**, காப்பாட்சியர், புதுக்கோட்டை

கடற்கரைப் பகுதி முஸ்லீம்களின் கடல் சார்புச் செயல்பாடுகள், பொருளாதாரம், சமூக, பழக்க வழக்கங்கள், முனைவர் பட்டத்திற்காக ஆய்வு.

முனைவர் சி. **மகேசுவரன்**, காப்பாட்சியர், உதகை

"முகமூடிகள்" பற்றிய ஆய்வு நேரு அறக்கட்டளை நிதியுதவியுடன்.

மதுரை

மதுரை அருங்காட்சியகத்தைப் புதிய இடத்தில் கட்டடம் கட்டி அமைக்க தமிழ் வளர்ச்சி-பண்பாட்டுத் துறை செயலாளர், திரு. வை. பழனிச்சாமி, இ.ஆ.ப., அவர்கள் காந்தி அருங்காட்சியகச் செயலரைக் கலந்து பேசி புதிய இடத்தை தேர்வு செய்தார்.

வெளியீடுகள்

சென்னை

முனைவர் **நே. தேவசகாயம்**, துணை இயக்குநர், மற்றும் முனைவர் **வே. ஜெயராஜ்**, வேதியியப் பாதுகாப்புப் பிரிவு காப்பாட்சியர்.

1. அருங்காட்சியக மலர், ஜனவரி - மார்ச், 1997 (தமிழ்).

முனைவர் **வே. ஜெயராஜ்,** வேதியியப் பாதுகாப்புப் பிரிவு காப்பாட்சியர்

4.5.1997 ***"ஈரோடு அரசு அருங்காட்சியகக் கையேடு"*** (தமிழ்)

2.6.1997 ***வேதியியப் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி ஆய்வகம் - ஓர் அறிமுகம்*** (ஆங்கிலம்)

திரு. **பா. ஜவஹர்,** விலங்கியல் பிரிவு காப்பாட்சியர்

2.6.1997 ***விலங்கினங்களைப் பதப்படுத்தும் முறை*** (ஆங்கிலம்)

திருமதி. **ம.ந. புஷ்பா,** தாவரவியல் பிரிவு காப்பாட்சியர்

2.6.1997 ***தாவரங்களைப் பேணி பாதுகாக்கும் முறை*** (ஆங்கிலம்)

மாவட்டங்கள்

திரு. **ப. காசிலிங்கம்,** கிருட்டிணகிரி அருங்காட்சியகக் காப்பாட்சியர்.

2.6.97 ***கிருட்டிணகிரி அருங்காட்சியகக் கையேடு*** (தமிழ்)

திருமதி. **ரு.தே. துளசி பிருந்தா,** கடலூர் அருங்காட்சியகக் காப்பாட்சியர்.

2.6.97 ***கடலூர் அருங்காட்சியகக் கையேடு*** (தமிழ்).

ஆய்வுக் கட்டுரைகள்

சென்னை

முனைவர் **வே. ஜெயராஜ்,** வேதியியப் பாதுகாப்புப் பிரிவு காப்பாட்சியர்

1. ***கோயில் அரும்பொருட்களின் பாதுகாப்பு,*** அருள்மிகு பிரசன்ன விநாயகர் திருக்கோயில் நன்னீராட்டு மலர், பெப்ருவரி, 1996.
2. ***திப்பு சுல்தானின் நூலகம்,*** ஈரோடு திப்புசுல்தான் ஆய்வரங்கம், 1997.

திரு. **நா. சுலைமான்,** காப்பாட்சியர், மதுரை

"பேகம்பூர் முஸ்லீம் தர்ஹாவிற்கு நாகல் நகர் (திண்டுக்கல்) இந்து கட்டியவரி" (செப்பேட்டுச் செய்தி வாயிலாக) தினபூமி. சிறப்பு மலர் 20.5.97.

"மத நல்லிணக்கத்திற்கு வரலாற்றுச் சான்றுகள்" மதுரை நூருல் இஸ்லாம் கல்விச் சங்க ஆண்டு மலர், ஜூன் 97.

திரு. **ம. காந்தி,** வேலூர் அருங்காட்சியகக் காப்பாட்சியர்.

வேலூர் ஆலோசகத் தமிழ் புத்தாண்டு மலர் 1997 ல் வெளிவந்தவை.

1. வேலூர் கோட்டையில் சில அம்சங்கள்

2. அருள்மிகு வழித்துணை நாதர் திருக்கோயில், விரிஞ்சிபுரம்.

3. அனைவரும் காண வேண்டிய வேலூர் அரசு அருங்காட்சியகம்.

4. வேலூர், அரசு அருங்காட்சியகத்தில் கி.பி. 9 ஆம் நூற்றாண்டு தீர்த்தங்கரர் கற்சிலை.

5. ஐயனார் கற்சிலை.

6. வேலூர், அரசு அருங்காட்சியகத்தின் திருமகள் மற்றும் மூதேவி கற்சிலைகள்

7. தமிழ்நாட்டில் அருங்காட்சியக வரலாறு

8. துண்டு வெளியீடு: தமிழ்நாட்டில் பாறை ஓவியங்கள்ஆய்வறிக்கைகள்

முனைவர் **வே. ஜெயராஜ்,** வேதியியப் பாதுகாப்புப் பிரிவு காப்பாட்சியர்

1. திரு. நக்பாலின் சேகரிப்பிலுள்ள ஓவியங்களின் நிலையும் அவற்றின் பாதுகாப்பும்.

2. இராமகிருஷ்ணா மடத்திலுள்ள கையெழுத்துப் பிரதிகளின் பாதுகாப்பு

3. தமிழ்நாடு ஆவணக்காப்பகத்திற்கு ஒரு வேதியியப் பாதுகாப்பு ஆய்வகம்

வல்லுநர் கூட்டத்தில் பங்கு

29.4.97, 3.6.97 முனைவர் நே. தேவசகாயம், துணை இயக்குநர் அவர்கள் இந்திய தொல் பொருளியல் காப்பு மையத்தில் "அரும்பொருட்கள் இல்லாதவைகளின் ஏற்றுமதி" பற்றிய வல்லுநர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

அலுவலர் பணிமாற்றங்கள்

1. கல்விப் பிரிவு காப்பாட்சியர் திருமதி. தீ. அம்ருதலட்சுமி விடுப்பில் சென்றுள்ளதால் திருமதி அ.பிரேம தீபராணி காட்சிக் கூட விளக்குநர் தற்காலிகமாக காப்பாட்சியராக பணி உயர்வு செய்யப்பட்டார்.

2. திரு. நா. சுலைமான், காப்பாட்சியர் மதுரை அருங்காட்சியக காப்பாட்சியராக பணிமாற்றம் செய்யப்பட்டார்.

3. திருமதி. ஜா.மோ. காந்திமதி, விலங்கியல் பிரிவு உதவிக் காப்பாட்சியர், ஈரோடு அருங்காட்சியகக் காப்பாட்சியராக பதவி உயர்வு பெற்றார்.

4. திரு. ந. சுந்தரராஜன், தேசிய கலைக்கூட உதவி காப்பாட்சியர் சிவகங்கை காப்பாட்சியராக பதவி உயர்வு பெற்றார்.

5. திருமதி சே. கிருஷ்ணம்மாள், காட்சிக் கூட விளக்குநர், திருநெல்வேலி காப்பாட்சியராகப் பதவி உயர்வு பெற்றார்.

6. திரு. ப. காசிலிங்கம், கிருட்டிணகிரி காப்பாட்சியர் உதகை அருங்காட்சியகக் காப்பாட்சியராக பணிமாற்றம் செய்யப்பட்டார்.

7. முனைவர் சி. மகேஸ்வரன், உதகை காப்பாட்சியர் கோவை அருங்காட்சியகத்திற்குப் பணி மாற்றம் செய்யப்பட்டார்.

8. திரு. கே. கருணாநிதி, கோவை காப்பாட்சியர், திருவாரூருக்குப் பணிமாற்றம் செய்யப்பட்டார்.

9. திரு. மா. சாம் சத்யராஜ், மதுரை காப்பாட்சியர் கிருட்டிணகிரி அருங்காட்சியகத்திற்குப் பணிமாற்றம் செய்யப்பட்டார்.

10. திரு. அ. பெரியசாமி, ஈரோடு காப்பாட்சியர் பழனி அருங்காட்சியகத்திற்குக் காப்பாட்சியராகப் பணிமாற்றம் செய்யப்பட்டார்.

11. திரு. க. தண்டாயுதபாணி திருச்சி அருங்காட்சியகத்திலிருந்து சென்னைக்கு போலி உயிரினம் ஆக்குநர் தரம் 1 பதவியில் மாற்றம் செய்யப்பட்டார்.

12. திரு. ரா. காமராஜ், போலி உயிரினம் ஆக்குநர் தரம் 2. பதவி உயர்வில் திருச்சி அரசு அருங்காட்சியகத்திற்கு போலி உயிரினம் ஆக்குநர் தரம் 1 ஆக 30.5.97 முதல் மாற்றலாகிச் சென்றார்.

கல்விப் பணிகள்

சென்னை

பள்ளிகள் மூலமாக, குழுக்களாக வரும் மாணவ மாணவியருக்கு விளக்கிக் கூறும் பணி மேற்கொள்ளப்பட்டது. சொற்பொழிவுகள் மற்றும் நிகழ்ச்சிகளுக்கான ஒருங்கிணைப்புப் பணிகள் கவனிக்கப்பட்டன. சிறப்பு பார்வையாளர்கள் காட்சிக் கூடங்களைப் பார்வையிட உதவப்பட்டது.

முக்கிய பிரமுகர்கள் வருகை

சென்னை

1. ஜான் ரீவ், பிரிட்டீஷ் அருங்காட்சியகம், இலண்டன்.
2. சரிகா கமலஹாசன், சென்னை 18.
3. டாக்டர் ஒ.பி. அகர்வால், இயக்குநர்த் தலைவர், ஜெனரல், இந்திய பாதுகாப்பு நிறுவனம்.

4. திரு. எஸ். சுப்பாராமன், இயக்குநர், இன்டாக், பெங்களூர்.

5. டாக்டர். டோர்ஜி, இணை இயக்குநர், தேசிய அருங்காட்சியகம், பூடான்.

6. திரு. நவோதுரி நாகசே, ஜப்பான்.

சென்னை அருங்காட்சியகத்தைப் பார்வையிட்ட பார்வையாளர்களின் எண்ணிக்கை

பார்வையிட்ட மாணவர்களின் எண்ணிக்கை	:	3,860
பார்வையிட்ட பள்ளிகளின் எண்ணிக்கை	:	51
மொத்த பார்வையாளர்களின் எண்ணிக்கை	:	1,19,703

வருங்கால நிகழ்வுகள்

சென்னை

தாவரவியல் பிரிவு

"*குறிஞ்சிப் பாட்டின் பூ வகைகள்*" காட்சிக் கூடம் அருங்காட்சியக வளாகத்தில் ஆழ்கிழாய்க் கிணறுகள், தோட்டங்கள், நீர் ஊற்றுகள், குளங்கள், புல்வெளிகள் அமைக்கப்படவுள்ளன.

ஜூலை மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் 3 வது திங்கள் கிழமைகளில் இலவச சித்த மருத்துவமுகாம், யோகா, மற்றும் சிறப்புச் சொற்பொழிவுகள் ஆகியவை தொடர்ந்து நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

வேதியியப் பாதுகாப்புப் பிரிவு

1. பி.எச்.டி. பட்டத்திற்கான ஆராய்ச்சித் திட்ட தொடக்கம்.
2. வேதியியப் பாதுகாப்புக் கூடம் அமைத்தல்
3. மாவட்டங்களில் பயிற்சிகள்

கல்விப்பிரிவு

1. பள்ளிச் சிறுவர்களுக்கான ஓவியப்போட்டி
2. திங்கட் சொற்பொழிவுகள்
3. பள்ளிச் சிறுவர்களுக்கான படக்காட்சிகள் காண்பித்தல்

ஈரோடு

97-98ஆம் ஆண்டுக்கான இரண்டாம் பகுதி திட்டத்தின் கீழ் காட்சிப் பெட்டிகள் சீரமைக்கும் பணி நடை பெற்று வருகிறது.

அருங்காட்சியகத்தின் முன்பு புதிய பெயர் பலகை மற்றும் அறிவிப்புப் பலகை வைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஜூலை மாதத்தில் நடைபெற உள்ள அருங்காட்சியக வார விழா தொடர்பாக ஓவியப்போட்டி, கட்டுரை போட்டி, கவிதைப் போட்டி சிறப்புக் கண்காட்சி, சொற்பொழிவுகள் நடைபெறும்.

கன்னியாகுமரி

1. பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு வேதியியப் பாதுகாப்பு பயிற்சி- ஆகஸ்ட் அல்லது செப்டம்பர்.
2. கன்னியாகுமரி மாவட்ட முக்கிய தலைவர்களின் நிழற்படம் சேகரித்து காட்சிக் கூடம் அமைத்தல்

திருநெல்வேலி

ஜூலை 97 அருங்காட்சியக வாரவிழா

1. அஞ்சல் தலைக் கண்காட்சி
2. நாணயங்கள், மெடல்கள் கண்காட்சி
3. பள்ளி மாணவர்களுக்கு வினாடி வினா போட்டி
4. கண் தெரியாத மாணவர்களுக்கு கற்சிற்பங்களை தொட்டுணர்ந்து பெயர் சொல்லும் போட்டி
5. சிறப்புச் சொற்பொழிவுகள்
6. ஆகஸ்டு 97 "தீக்குச்சியில் ஓவியங்கள்" கண்காட்சி
7. "சுதந்திரப் பொன்விழா ஆண்டையொட்டி சுதந்திர போராட்ட வீரர்கள் கூடம்" அமைத்தல்
8. செப்டம்பர் 27 பாதிக் ஓவியக் கண்காட்சி மற்றும் பாதிக் ஓவியப் பயிற்சி முகாம்.

சென்னை 8 — **கண். தீனதயாளன்,** இ.ஆ.ப.,

நாள்: 9.7.1997 — அருங்காட்சியகங்களின் ஆணையர்.

கட்டுரைப் பகுதி

சென்னை அருங்காட்சியகத்தில் மூன்று சிறந்த நடராசர் செப்புத் திருமேனிகள்

- இரா. பாலசுப்ரமணியன்
காப்பாட்சியர், தொல்பொருள் பிரிவு.

தமிழரின் கலைவண்ணத்திற்கு சான்றாகத் திகழ்வது நடராசர் உருவம். மிகத் தொன்மைக் காலம் தொட்டு சிவ வழிபாட்டில் ஈடுபாடு கொண்டிருந்த அறிஞர்களும் கலைஞர்களும் சிவபெருமானை பல்வேறு ஆடற்கோலங்களில் கண்டு களித்திருக்கின்றனர். ஆடற்கலை காலந்தோறும் வளர வளர நடராசரின் திருவுருவத் தோற்றமும் மாறுதல்கள் அடைந்து வந்திருக்கின்றது. வளர்ச்சி நிலையில் அமைந்த ஒவ்வொரு தோற்றமும் கலைநயமிக்கதாகவே பொலிந்தது வியப்புக்குரிய செய்தியாகும். காரைக்காலம்மையார் *'அறவா நீ படும் போதுன் அடியின் கீழ் இருக்க,* திருநாவுக்கரசு *'அத்தா உன் ஆடல் காண்பான் அடியனேன் வந்தவாறே,* என்றும் கண்டராதித்தர் *"அத்தா உன்தன் ஆடல் காண அனைவதும் என்று கொலோ"* என்றும் திருஞானசம்பந்தர் பெருமான் *"ஆடவல்ல அடிகள்", "மாநடம் ஆட வல்லவனே"* என்றும், *"நடமாட வல்லாய்", "ஆடவல்லார்"* என்று சுந்தரும் *"அரங்காட வல்லார் அவரே ஆடவல்லார்"* என்று சுந்தரும், *"அரங்காட வல்லார் அவரே அழகியர்"* என்று சேக்கிழார் பெருமானும் சிவபெருமானின் அழகிய ஆடல் தோற்றத்தைப் பல்வாறு எடுத்தியம்புகின்றனர்.

தேவாரத்திரட்டுகளில் இறைவனின் ஆடல் தான் சுட்டப்பட்டுள்ளது. அவற்றிற்குப் பெயர் ஒன்றும் குறிப்பிடவில்லை. காரைக்காலம்மையார் *"அந்தி நிருத்தம் அனல் கை ஏந்தி அழகன் ஆடுமே"* என்று குறித்துள்ளார். அந்தி என்னும் சொல் சந்தி என்று வடமொழியில் வழங்கப்படுகிறது. எனவே, அக்காலத்தில் ஆடப்பட்ட நடனம் *"சந்தியா தாண்டவம்"* என்று வடமொழியிலும் *"அந்தி நிருத்தம்"* என்று தமிழிலும் அழைக்கப்பட்டிருக்க வேண்டும்.

திருநாவுக்கரசரும் தம் பாடல்களில் ***"சதுர நடம் ஆட்டுகந்த சைவர்"*** என்றும் ***"சந்திக்கண் நடமாடுஞ் சதுரனை"*** என்றும் ஆடவல்லானை எடுத்தியம்புகிறார். மாணிக்கவாசகரும் ***"சதுரப் பெருமான்"*** என்றும், ***"சதுரன்"*** என்றும் தம் பாடல்களில் குறிக்கின்றார். இந்த ***சதுர நடம்*** என்பதே தற்கால வழக்கிலுள்ள ***சதுரதாண்டவம்*** என்னும் ஆடலைக் குறிக்கின்றது. ***"சதுரப் பெருமான்"*** என்னும் சொல் சதுர நடம் ஆடும் பெருமானைக் குறிக்கின்றது.

இன்று நமக்குக் கிடைத்திருக்கும் ஆடவல்லான் திருமேனிகளில் முதன்மையானது ***கூரம் நடராசர்*** செப்புத் திருமேனியேயாகும். இவண் நடராசர் நான்கு கைகளைக் கொண்டுள்ளார். வலக்கைகளில் ஒன்று துடி ஏந்தியும், மற்றொன்று அபயக்கரமாகவும் உள்ளது. இடக்கைகளில் ஒன்று வேழ

முத்திரையாகவும், மற்றொன்று பாம்பைப் பிடித்தவண்ணமுமாய் காணப்படுகின்றது. முயலகன் மேல் இறைவன் ஆடுகின்றான். முயலகனோ பார்வையாளர்களைப் பார்த்துக் கொண்டிருக்கின்றான். விரிசடை காணப்படவில்லை. பிரபை உடைந்து காணப்படுகின்றது. கிரிடமகுடம் உள்ளது. இது ***"ஊர்த்வஜானு"*** தாண்டவமாகும். இத்தகைய திருமேனி வேறெங்கும் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். திரு. சி. சிவராமமூர்த்தி பல்லவத் திருமேனிகளில் இத்திருமேனி முதன்மையானது என்று குறிப்பிடுகின்றார். இது ஒன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்தது ஆகும்.

அதே போன்று பாண்டியர் காலத் திருமேனிகளில் முதன்மையானது பொருப்புமேட்டுப்பட்டியிலிருந்து பெறப்பட்டுள்ள மாறுகால் நடராசர் திருமேனியாகும். இத்திருமேனி கி.பி. பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சார்ந்தது. இத்திருமேனியில் ஆடவல்லான் இடக்காலை ஊன்றி வலக்காலை இடப்பக்கம் தூக்கி ஆடுகிறார். இங்கு இவருக்கு நான்கு கைகள் உள்ளன. வலக்கைகளில் ஒன்று தீ ஏந்தியதாகவும், மற்றொன்று அபயகரமாகவும் காணப்படுகின்றது. இடக்கைகளில் ஒன்று துடி ஏந்தியதாகவும் மற்றொன்று வேழ முத்திரையாகவும் உள்ளது. முயலகன் இடப்புறம் நோக்கிப் படுத்திருக்கிறான். அவன் கவிழ்ந்து படுத்திருப்பதால் அவன் முதுகின்மேல் இடக்கால் நன்றாக ஊன்றப்பட்டுள்ளது தெளிவாக புலப்படுகிறது. விரிசடை இல்லை. பிரபை உடைந்து போயிருக்க வேண்டும். பிரபையின் தாங்கிகள் மட்டுமே காணப்படுகின்றன. அத்தாங்கிகளின் அடியில் யாளி முன் கால்களைத் தூக்கிய நிலையில் காணப்படுகின்றது.

சோழர் காலச் செப்புத் திருமேனிகளில் ஒப்புயர்விலா செப்புத் திருமேனி என்று புகழப்படும் திருவாலங்காடு செப்புத் திருமேனி பிரான்சு நாட்டினரான ***"ரோடின்"*** என்னும் கலைஞராலும், ஆனந்த குமாரசுவாமி போன்ற வல்லுநர்களாலும் புகழப்பெற்றது. சற்றே மேலே தூக்கிய முகத்தில் முக்கண்களும், நான்கு தோள்களும், குமிழ் சிரிப்புடன் கூடிய முகமும், கபாலம், கொக்கினிறகும், ஊமத்தையும், கங்கையும், நிலவும் ஆகிய இவற்றை சிரசில் அணிந்ததாகவும், வலப்பாதம் அபஸ்மார புருஷன் எனப்படும் அஞ்ஞானத்தின் மீதும் இடப்பாதம் தூக்கப்பட்டு குஞ்சிதமாகவும், வலக்கரங்களுள் முன்கரம் அபயம் அளிக்கும் கரமாகவும், பின்கரம் டமருகம் தாங்கியதாகவும், இடக்கரங்களில் முன்னது வேழக்கரமாகவும் பின்னது அக்னி ஏந்தியதாகவும், இடச் செவியில் திருத்தோடும் வலச்செவியில் மகர குண்டலமும் அணிந்தவராகவும், அபயக்கரத்தில் நாகபூஷணம் பூண்டதாகவும் பொலிவுற காணப்படுகின்றது. சடை காணப்படவில்லை. மேலும் பிரபை உடைந்து காணப்படுகின்றது.

"ரோமானிய திருநிலைப்பாடு நாணயங்கள்" - ஒப்பீடு

- இரா. சாந்தி

காப்பாட்சியர், நாணயவியல் பிரிவு

ஒருவரின் தனித்தன்மைக்காகவும், நற்பணிகளுக்காகவும் அவரை தெய்வீக பண்பாளராகப் போற்றுதல் என்பது கிரேக்கர்களின் தொன்மையான வழக்கமாக இருந்தது. இவ்வழக்கத்தை சீசரின் காலம் தொட்டு ரோமானியர்கள் பின்பற்றலாயினர்.

பேராசர்களின் வாழ் நாளிலும், அவர்களின் மறைவிற்கு பின்னரும் அவர்களுக்கு திருநிலைப்பாடு வழங்கும் முறை ரோமானியரின் வரலாற்றில் ஓர் சிறப்பிடத்தைப் பெற்றது. இத்தகைய திருநிலைப்பாடு பெற்ற அரசர்களுக்கும் அரசியர்களுக்கும் சிறப்பு நாணயங்கள் தங்கம், வெள்ளி மற்றும் செப்பில் வெளியிடப்பட்டன.

இத்திருநிலைப்பாடு நாணயங்களின் முன்புறத்தில் அரசர் அல்லது அரசியின் மார்பளவிலான உருவம் காணப்படும். பின்புறத்தில் மயில், பருந்து, திருநிலைப்பாடு கட்டிடம் (ஈமச்சடங்கு செய்ய அமைத்த கட்டடம்), தகனப்பீடம், கோயில் போன்ற சின்னங்கள் இடம் பெற்றன.

மேற்கண்ட சின்னங்களில் பருந்து பேரரசர், மற்றும் பேரரசி இருவரின் நாணயங்களிலும் இடம் பெற்றது. ஆனால் மயில் அரசியரின் நாணயங்களில் மட்டுமே காணப்படுகிறது.

ரோமானியரின் மழைக்கடவுள் ஜுபிடரின் சின்னம் பருந்தாகும். அவரின் தேவி ஜுனோவின் (வீரத்திற்கும் அழகிற்கும் தேவதை) சின்னம் மயில். எனவே பருந்து அரசர்களின் நாணயங்களிலும் மயில் அரசியரின் நாணயங்களிலும் காணப்படுகிறது. இத்தகைய திருநிலைப்பாடு சின்னங்கள் கொண்ட அரசர் மற்றும் அரசியர் ஜுபிடர் மற்றும் ஜுனோ தெய்வங்களுக்கு ஒப்பானவர்களாக ரோமானியர்களால் கருதப்பட்டனர்.

சென்னை அரசு அருங்காட்சியகத்தின் நாணயவியல் பிரிவின் தொகுப்பில் உள்ள ரோமானிய தங்க நாணயங்களில் மயில், திருநிலைப்பாடு கட்டடம் இடம் பெற்ற மூன்று நாணயங்கள் பேரரசர் கமோடஸ் மற்றும் பேரரசி முதலாம் பாஸ்டினாவின் சிறப்பு நாணயங்கள் ஆகும்.

நாணயங்களைப் பற்றிய விளக்கவுரை

மன்னர் மார்கஸ் அரோலியஸ் கி.பி. 180ல் திருநிலை அடைந்தது தொடர்பாக வெளியிடப்பட்ட தங்கநாணயம்.

முன்புறம்:

பேரரசரின் முதிய தோற்றத்துடன் மார்பளவிலான வடிவம். அதைச் சுற்றி DIVVS "M A T" ONINUS PIVS என்ற சொற்றொடர். நாணயத்தின் விளிம்பில் குமிழ்கள் காணப்படுகின்றன.

பின்புறம்:

திருநிலைப்பாடு கட்டடம். அதனைச் சுற்றி "CONSECRATION" என்ற எழுத்துகள், ஒரு புறமாக. விளிம்பை ஒட்டி மணி போன்ற குமிழ்கள்.

இக்கட்டடம் ஈமச்சடங்குக்கான படைக்கல அடுக்குகளைக் கொண்ட நான்கு அடுக்குக் கட்டடமாகும். இதன் அடித்தளம் தோரணங்களாவ் அலங்கரிக்கப்பட்டு, மேவ் அடுக்கு சிலைகளின் அணிவகுப்பாவ் அழகூட்டப்பட்டுள்ளது. இதன் உச்சியில் பேரரசருக்கான நான்கு குதிரைச் சாரட்டும் காணப்படுகிறது.

உலோகம்	தங்கம்
வடிவம்	வட்டம்
விட்டம்	2.1 செ.மீ.
எடை	7.38 கிராம்

பேரரசியார் முதலாம் பாஸ்டினாவின் நாணயங்கள்

மார்கஸ் அனியஸ் விரஸ் என்ற கவுசினரின் மகளாக கி.பி. 105ல் பாஸ்டினா பிறந்தார். அன்டோனியஸ் பயஸை மணந்ததாவ் அகஸ்டா என்ற பட்டப்பெயரையும் பெற்றார். தனது 36வது வயதில் (கி.பி. 141ம் ஆண்டு) உயிர்நீத்தார். இவரது மறைவுக்குப் பின்னர் மிக அதிக அளவில் இவரின் திருநிலைப்பாடு நினைவு நாணயங்கள் அதற்குரிய சின்னங்களுடன் வெளியிடப்பட்டன. அவைகளில் பாஸ்டினா என்ற பெயருக்கு முன் "டீவா" என்ற அடைமொழி இணைத்து பொறிக்கப்பட்டது. டீவா என்பதற்கு "தெய்வீகம்" என்று பொருள்.

நாணயங்களைப் பற்றிய விளக்கவுரை

நாணயம் - 1

முன்புறம்:

முதலாம் பாஸ்டினாவின் மார்பளவிலான உருவம். வலமாக, மடிப்புகளுடன் போர்த்திய ஆடை, நுட்பமாக, அலைகளைப் போன்ற

தலைமுடியை சுருள் வடிவாக முறுக்கி, வரித்து, திருகி உச்சித் தலையில் பின்னிய சிகை அலங்காரம். 'DIVA FAVSTINA' என்ற எழுத்துகள் அரசியாரின் உருவத்தின் இருப்பக்கமாகவும், நாணத்தின் விளிம்பை ஒட்டியவாறு மணி போன்ற குமிழ்களும் காணப்படுகின்றன.

பின்புறம்

மயில் குவிந்த தோகையுடன், இடபக்கமாக தனது தலையைத் திருப்பி வலப்பக்கமாக நடக்கிறது. அதனைச் சுற்றி 'CONSECRATION' என்ற எழுத்துகளும், விழிம்பை ஒட்டியவாறு குமிழ்களும் காணப்படுகின்றன.

தன்மை

உலோகம்	:	தங்கம்
வடிவம்	:	வட்டம்
விட்டம்	:	2 செ.மீ.
எடை	;	7.17 கிராம்.

நாணயம் II

இந்நாணயத்தில் உள்ள சின்னங்கள் எழுத்துக்கள் யாவும் முதல் நாணயத்தில் உள்ளது போன்றே அமைந்துள்ளன.

உலோகம்	:	தங்கம்
வடிவம்	:	வட்டம்
விட்டம்	:	1.9 செ.மீ.
எடை	:	7.06 கிராம்

ஒப்பீடு

மேற்கண்ட மூன்று திருநிலைப்பாடு நாணயங்களை ஒப்பிடுகையில் இவைகளில் காணப்படும் சின்னங்கள் மற்றும் உருவங்கள், பொறிக்கப் பட்டுள்ள எழுத்துகளின் அமைப்பு இவற்றில் வேற்றுமையுள்ளது.

காட்மாண்டுவில் கிடைத்த கமோடஸ் மன்னரின் தங்க நாணயத்தில் மிக நேர்த்தியான உருவத்தோற்றம், எழுத்துகள், தங்கத்தின் மாற்று இவைகள் மற்ற அசல் தங்க ரோமானிய நாணயங்களை ஒத்து உள்ளன. ஆனால் சொரப்பள்ளி, திருக்கோயிலூர் வட்டம், தென்னாற்காடு மாவட்டத்தில் கிடைத்த மற்ற இரண்டு தங்க நாணயங்களில் காணப்படும் உருவம், சின்னம் எழுத்து

இவைகளில் கலை நுணுக்கம் குறைந்து காணப்படுவதுடன் தங்கத்தின் மாற்றும் குறைந்து காணப்படுகிறது. அக்காலத் தமிழ் மன்னர்களின் தங்க நாணயங்களும் மாற்று குறைந்தும், சின்னங்களின் அமைப்பில் கலைநுட்பம் குறைந்தும் காணப்படும். பாஸ்டினாவின் தங்க நாணயங்களும் இவ்வாறே இருப்பதால் இவைகள் இரண்டும் உள்நாட்டுத் தயாரிப்பாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

மேற்கண்ட கருத்தை அண்மையில் கரூரிலும் தலைகாட்டிலும் கிடைத்த இரு ரோமானிய நாணயங்களின் வார்ப்படங்கள் (அச்சுக்கள்) பற்றி திரு. இரா. கிருஷ்ணமூர்த்தி (நாணயவியல் வல்லுநர்) தனது ஆய்வு கட்டுரையில் (இந்திய நாணயவியல் சங்கத்தின் 82 வது ஆண்டு கருத்தரங்கு பூனே) "பண்டைய தமிழ்நாட்டில் உள்நாட்டு சந்தையின் தேவையை பூர்த்திச் செய்ய இத்தகைய கலப்பட நாணயங்கள் உள்நாட்டு தங்கத்தில் இங்கேயே தயாரிக்கப்பட்டு புழக்கத்தில் இருந்திருக்கலாம்" என்று தெளிவுபடக் குறிப்பிட்டுள்ளதாலும் மேற்கண்ட இரண்டு தங்க நாணயங்கள் போலியானவை என்பது உறுதியாகின்றது.

தே.பி. ராய் சௌத்ரியின் ஓவியச் சேகரிப்புகள்

- ம.மோகன்,

காப்பாட்சியர், கலைப்பிரிவு

இந்திய பழங்கலை வளர்ச்சி 17 ஆம் நூற்றாண்டு வரையில் சிறப்புடன் விளங்கியது. முகலாயரது ஆட்சியில் இக்கலை ஒதுக்கப்பட்டதால் நலிவுறத் தொடங்கிற்று. பின்னர் ஆங்கிலேயரது ஆதிக்கத்தின் போது இந்திய ஓவியக்கலை புதிய மாற்றத்துடன் புத்துயிர் பெற்று வளர ஆரம்பித்தது. 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆங்கிலேய ஓவியர்கள் இந்தியாவில் குடியேறிய பின், ஓவியக் கலையில் மேற்கத்திய பாணியைப் புகுத்தினர். இந்திய ஓவியக் கலைஞர்களை மேற்கத்திய பாணி மிகவும் கவர்ந்தது. எனவே இந்திய ஓவியர்கள் ஆங்கிலேய ஓவியர்களிடம் மேற்கத்திய பாணியில் ஓவியம் மற்றும் சிற்பம் வடிக்கும் முறையைப் பயின்றனர். இவ்வாறாக, இந்தியாவில் நவீன ஓவியமும், சிற்பமும் உருவாக்கும் முறை தோன்ற ஆரம்பித்தன.

இந்திய வளர்கலை இயக்கத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்கியவர்களுள் வங்காளத்தைச் சேர்ந்த திரு. ராய் சௌத்ரி அவர்கள் குறிப்பிடத்தக்கவர் ஆவர். இவர் இந்தியாவின் தலை சிறந்த ஓவியரும், சிற்பக்கலை வல்லுநரும் ஆவார். ராய் சௌத்ரி வங்காளத்தின் கிழக்குப் பகுதியில் 1899 ஆம் ஆண்டு பிறந்தார். இவர் வங்காள மறுமலர்ச்சி கலைப் பள்ளியினைச் சேர்ந்தவர். ஓவியக் கலையை முறையே அபனீந்திரநாத் மற்றும் இத்தாலிய ஓவியர் பாய்ஸ் ஆகியோரிடம் பயின்றார். பல்வேறு முயற்சிகளுக்குப் பிறகு, கலை உலகில் பிரபலமாகி, பல பதக்கங்களையும், பரிசுகளையும் பெற்றுள்ளார். இவர் நீர் வண்ண ஓவியங்களில் நுட்பமான நுணுக்கங்களையும், ஆழமான கருத்துக்களையும், மனதில் பதியும் வண்ணம் வரைந்துள்ளார். இவர் வரைந்த ***"வீணையுடன் பெண்மணி", "தாயும் குழந்தையும்"***, மற்றும் ***கோயிலின் முகப்புத் தோற்றமும்*** மிகச் சிறப்பு வாய்ந்தவை. இவை சென்னை அருங்காட்சியக வளர்கலைக் கூடத்தில் காட்சியில் இடம் பெற்றுள்ளன.

ராய் சௌத்ரி பின்னர் சிற்பங்களை உருவாக்குவதில் ஈடுபடலானார். வங்காளச் சிற்ப ஆசிரியர் ஹிரோன்மணி சௌத்ரியிடம் சிற்பக்கலையைப் பயின்றார். ராய் சௌத்ரி வடித்த நவீன சிற்பங்கள் தத்ரூபமாகவும், தெளிவாகவும், மனதில் உணர்ச்சிகளைத் தூண்டுவனவாகவும் அதே சமயத்தில், சிற்பத்திற்கு உயிர் உள்ளது போன்றும் காணப்படுகின்றன. அவர் உருவாக்கிய சிற்பங்கள் எண்ணிலடங்காது. தமிழகத்தில் ராய் சௌத்ரி வடித்த சிற்பங்களுள், சென்னை மெரீனா கடற்கரையில் அமைந்துள்ள ***உழைப்பாளிகள் சிலை, மகாத்மா காந்திஜி***யின் உருவச்சிலை, சென்னை ஸ்டான்லி மருத்துவமனையில்

உள்ள ஆங்கிலேயக் கவர்னர் ஜெனரல் ***ஜார்ஜ் பிரடெரிக் ஸ்டான்லி*** சிலையும், சென்னை அருங்காட்சியக வளர் கலைக் கூடத்தில் உள்ள ***குளிர் காலத்தின் தோற்றம், பசியின் கொடுமை, மகாத்மா காந்திஜி*** போன்றவை அற்புதமானவை ஆகும்.

ராய் சௌத்ரி தென்னகத்தில் சென்னை கலை மற்றும் கைத்தொழில் கல்லூரியில் முதல்வராகப் பொறுப்பேற்று 1929 முதல் 1957 வரையில் வளர்கலைக்காக சிறப்பாகப் பணி புரிந்துள்ளார். தமிழகத்தின் பல முன்னோடி ஓவியர்கள் ராய் சௌத்ரியிடம் ஓவியக் கலையைப் பயின்றவர்கள் ஆவார்கள். சென்னை அருங்காட்சியகக் கலைப்பிரிவில் சுமார் 1,200 ஓவியங்களுடன் நவீன சிற்பங்களும் சேகரிப்பில் உள்ளன.

அவற்றுள் ராய் சௌத்ரியின் படைப்புகள் ஓவியங்களும் சிற்பங்களும் உட்பட ஆறு ஆகும். இவையாவும் வளர்கலைக் கூடத்தின் கீழ்த்தளத்தில் காட்சியில் இடம் பெற்றுள்ளன. ராய் சௌத்ரியின் ஓவியங்களும், சிற்பங்களும், தேசிய நவீன கலைக்கூடம், புதுடெல்லி; சாலர் ஜங் அருங்காட்சியகம், ஹைதராபாத்; இந்திய மற்றும் வெளிநாட்டு ஓவியக் கூடங்களின் சேகரிப்பில் உள்ளன. ராய் சௌத்ரி பல வங்காள நூல்களையும் எழுதியுள்ளார்.

அமிர்தி யானையின் எலும்புக்கூடு

- பா. ஜவகர்

காப்பாட்சியர், விலங்கியல் பிரிவு.

வேலூருக்கு அருகில் சுமார் 25 கி.மீ. தொலைவிலுள்ள அமிர்தி வனப்பகுதியிலுள்ள விலங்ககத்தில் வாழ்ந்து இறந்த குட்டி யானை புதைக்கப்பட்டு, அதன் எலும்புகள் பிப்ரவரி 97, 5-ஆம் நாள் அன்று தோண்டியெடுக்கப்பட்டன. இவ்வெலும்புகள் தூய்மைப் படுத்தப்பட்டு வேதியியப் பாதுகாப்பளிக்கப்பட்டு வேலூர், அரசு அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

துதிக்கையின வரிசையைச் சேர்ந்த யானை குடும்பத்தில், ஆப்பிரிக்க யானை (லோக்சோடோன்டா ஆப்பிரிக்கானா), இந்திய யானை (எலிபாஸ் மேக்சிமஸ்) என்ற இரண்டு யானை இனங்கள் தற்போது உலகில் வாழ்கின்றன. தலையின் முன் பகுதியிலிருந்து தொங்கும் பெரிய துதிக்கை யானையின் தனிச் சிறப்பான உறுப்பு ஆகும். மேலுதட்டுடன் இணைந்து வளர்ச்சியடைந்த முன்துருத்திய மூக்கே துதிக்கை ஆகும். துதிக்கையின் நுனியில் யானை மூச்சுவிடும் மூக்குத் துளைகளும், மிகவும் நுண்ணுணர்வு உள்ள விரல் நீட்சியும் உள்ளன. இந்திய யானை சுமார் மூன்று மீட்டர் உயரமும் நான்கு டன்களுக்கு மேல் எடையும் உடையது. யானையின் நீளமற்ற மிகப்பெரிய உடல் பருத்த கால்களை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. இந்திய யானையின் பின்னங்கால்களில் நான்கு குளம்புகளும், முன்னங்கால்களில் ஐந்து குளம்புகளும் உள்ளன. ஆப்பிரிக்க யானையின் முன்னங்கால்களில் ஐந்து குளம்புகளும், பின்னங்கால்களில் மூன்று குளம்புகளும் உள்ளன.

யானையின் பற்கள் தனித்தன்மை வாய்ந்தவை. வாயிலிருந்து முன்புறம் வளைந்துள்ள இரண்டு தந்தங்கள் வடிவமாற்றம் அடைந்த வெட்டுப் பற்கள். இந்திய யானைகளில் ஆண் யானைகளுக்கு மட்டுமே தந்தங்கள் நன்கு வளர்ச்சியடைந்துள்ளன. ஆப்பிரிக்க யானைகளில் பெண் யானைகளுக்கும் நீண்ட தந்தங்கள் உள்ளன. சென்னை அருங்காட்சியகத்தில் நன்கு வளர்ச்சியடைந்த தந்தங்களுடன் ஆண் யானையின் எலும்புக்கூட்டினையும், தந்தங்களற்ற பெண் யானையின் எலும்புக்கூட்டினையும் காணலாம். யானைத் தந்தம் பில்லியர்ட் பந்துகள், ப்ரூச்சுகள் மற்றும் அலங்காரப் பொருட்கள் செய்வதற்குப் பயன்படுகிறது.

வாயின் உள் ஆழத்தில் இரு புறங்களிலும் மேலும் கீழும் ஒவ்வொன்றாக மிகப் பெரிய கடைவாய்ப் பற்கள், ஒவ்வொன்றும் ஏழு சென்டிமீட்டர் அகலமும், 26 சென்டிமீட்டர் வரை நீளமும் உள்ளவை அமைந்துள்ளன. கடை வாய்ப் பல்லின் தட்டையான மேற்பரப்பு எனாமல் மடிப்புப் புடைப்புக்களால்

மூடப்பட்டுள்ளது. இம்மாதிரிப் பற்களால் யானை மிகவும் கரடு முரடான தாவர உணவையும் மென்று அரைக்க வல்லது. கடைவாய்ப் பற்கள் சிதைந்து போனதும் புதிய கடைவாய்ப் பற்கள் அவற்றிற்குப் பின்னே முளைத்து விடுகின்றன. இந்த அமைப்பினை அமிர்தியில் தோண்டியெடுக்கப்பட்ட குட்டி யானையின் கடைவாய்ப் பற்களில் காணலாம். யானைக்குக் கோரைப் பற்கள் கிடையாது, கீழ் வரிசையில் வெட்டுப் பற்களும் கிடையாது. யானையின் மண்டை ஓடு மிகப் பெரியதாக இருப்பினும், காற்றறைகள் நிறைந்து மண்டை ஓட்டின் பாரம் குறைக்கப்பட்டுள்ளது. இக்காற்றறைகளின் மையத்தில் மூளை அமைந்துள்ளது.

பல ஆண்டுகளுக்கு ஒரு முறை, பெண் யானை ஒரு கன்றை மட்டுமே ஈனும். யானைகள் சுமார் 80 ஆண்டுகள் வரை உயிர் வாழ்கின்றன.

"டைனோசார்"களும் அருங்காட்சியகமும்

- ஜா.ரா. அசோகன்,
காப்பாட்சியர்
அரசு அருங்காட்சியகம், சென்னை.

டைனோசார்கள் என்றால் ராட்சச மிருகங்கள் என்பது அனைவரும் அறிந்த செய்தியாகி விட்டது. "டைனோசார்" என்ற பெயர் கிரேக்க மொழியிலிருந்து வந்தது. கிரேக்க மொழியில் டைனோசார் என்றால் பயப்படும்படியான விலங்கினம் என்று பொருள். இவ்வகை விலங்கினம் அழிந்து விட்டன. டைனோசார்கள் அற்றுப் போன உயிரினமாகி விட்டன.

டைனோசார்களின் சிறப்பு அவற்றின் மிகப் பெரிய உருவமாகும். ஆனால், டைனோசார்கள் அனைத்தும் மிகப் பெரிய உருவத்தை கொண்டவை அல்ல. 300 வகையான டைனோசார்கள் உலகத்தில் வாழ்ந்து அழிந்தன. அவற்றுள் 87 அடி கொண்ட 'டிப்ளோடோகஸ் (Diplodocus) என்ற வகையிலிருந்து 2 அடி நீளம் கொண்ட 'காம்சோகினாத்தஸ் (Compsognathus) என்ற வகை வரை பல்வேறு அளவுகளைக் கொண்ட டைனோசார்கள் வாழ்ந்து அழிந்தன. சில வகை டைனோசார்கள் 75 டன் (75,000 கிலோ) எடையைக் கொண்டிருந்தன. டைனோசார்களைப் பொதுவாக இரண்டு வகையாகப் பிரிக்கலாம். 1. தாவர உண்ணி வகையைச் சார்ந்தவை. 2. ஊண் உண்ணி வகையைச் சார்ந்தவை. இரண்டு வகையிலும் மிகப் பெரிய அளவில் விலங்கினங்கள் இருந்தன.

டைனோசார்கள் வாழ்ந்த காலம் 200 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பிருந்து 65 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு வரை. டைனோசார்கள் உலகில் வாழ்ந்தன என்பதற்கு ஆதாரமே, உலகின் பல்வேறு இடங்களிலும் கிடைக்கப் பெற்ற புதை படிவங்கள் (Fossils) ஆகும். டைனோசார்களின் எலும்புகள், முட்டைகள், அவற்றின் எச்சங்கள் ஆகியவை புதை படிவங்களாக கிடைக்கப் பெற்றுள்ளன. அவற்றின் எலும்புகளின் அமைப்பைக் கொண்டு டைனோசார்களின் உருவம் இவ்வாறு இருந்திருக்கும் என்ற யூகத்தில் அவற்றின் உருவத்தை விஞ்ஞானிகள் உருவாக்கினர். "ஜுராசிக் பார்க்" (Jurassic Park) என்ற படத்தின் மூலம் டைனோசார்கள் மக்களிடையே மிகவும் பிரபலமடைந்தன. ஏற்கனவே கூறியது போல் இரண்டு வகை டைனோசார்களில், ஊண் உண்ணும் வகையைச் சார்ந்த "டிரனோசாரஸ்" (Tyrannosaurus) என்ற இனம் மிகவும் வேகமாக இதர மிருகங்களை வேட்டையாடி கொன்றிருக்கலாம் என்று கருதப்படுகிறது. அவற்றின் உடல் அமைப்பும், பற்கள் அமைப்பும் அதற்கு ஏற்றவாறு அமைந்திருந்தன. டைனோசார்கள் ஓனான், பல்லி, முதலை ஆகியவை அடங்கியுள்ள 'ஊர்வன, (Reptiles) வகையைச் சார்ந்தவையே.

சில வகை டைனோசார்களின் மிகப் பெரிய உருவ அமைப்பும் அவை இதர இனங்களை வேட்டையாடி உண்ணும் விதமுமே (உருவ அமைப்பைக் கொண்டு நடந்திருக்கக் கூடும் என்று அனுமானித்தது) அவற்றின் மேல் மக்களுக்கு ஒரு பயம் கலந்த ஆர்வத்தை உண்டு பண்ணின. உலகில், வளர்ச்சியடைந்த நாடுகளின் முக்கிய அருங்காட்சியகங்களில் டைனோசார் களின் எலும்புக் கூடுகள், ஒன்று சேர்க்கப்பட்டு அதன் உருவ அமைப்பை காண்பிக்கும் வகையில் வைக்கப்பட்டுள்ளன. கண்ணாடி இழை நார் (Fibre Glass) மற்றும் ரப்பர் ஆகியவை கொண்டு அதன் வெளிப்புற தோற்றத்தை காண்பிக்கும் வகையிலும் பல்வேறு டைனோசார்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்தியாவிலும், புதுடெல்லி தேசிய இயற்கையியல் அருங்காட்சியகத்திலும் மற்றும் சில இடங்களிலும் கண்ணாடி இழையினால் ஆன "டைனோசார்கள்" அமைக்கப்பட்டுள்ளன. அயல்நாடுகளிலும், இந்தியாவில் புதுடெல்லி மற்றும் கல்கத்தா அறிவியல் மையங்களிலும் உடலின் பல பாகங்களை அசைத்து மக்களை பரவசப்படுத்தும் விதத்திலும் டைனோசார்கள் நிறுவப்பட்டுள்ளன. சென்னை அரசு அருங்காட்சியகத்தில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள இரண்டு டைனோசார்களைத் தொடர்ந்து மாவட்ட அருங்காட்சியகங்களான மதுரை மற்றும் சேலம் அருங்காட்சியகங்களில் டிரனோசாரஸ் (Tyrannosaurus) என்ற டைனோசார் விலங்கினத்தின் கண்ணாடி இழை மாதிரி ரூ. 1.5 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து கடலூர் மற்றும் வேலூர் மாவட்ட அருங்காட்சியகங்களிலும் இம்மாதிரிகள் நிறுவப்பட உள்ளன. இவற்றை அருங்காட்சியகங்களில் நிறுவுவதால் பொது மக்கள் அதிக அளவில் அருங்காட்சியகத்தை காண வருகின்றனர். அருங்காட்சியங்கள் இவ்வகையில் பொது மக்களுக்கு ஒரு வகையான கல்வி நிறுவனங்களாக சேவை செய்ய ஏதுவாகிறது.

புவியமைப்பில் காலப்படி "ஜுராஸ்ஸிக்" காலத்தில் (Jurassic Period) மிகவும் சிறப்புடன் அதிக எண்ணிக்கையில் வாழ்ந்த இவ்விலங்கினங்கள் எவ்வாறு அழிந்தன என்பது புதிராகவே உள்ளது. விண்ணிலிருந்து மிகப் பெரிய எரிநட்சத்திரக் கற்கள் பூமியில் விழுந்து அதனால் கிளம்பிய புகை மண்டலம், அல்லது எரிமலைகளிலிருந்து மிக அதிக அளவில் கிளம்பிய புகை மண்டலம் பூமியைச் சூழ்ந்து, சூரியனின் கதிர்வீச்சை நீண்ட காலம் மறைத்து அதனால் தாவரங்களின் பல்வேறு வகைகளும், தொடர்ந்து தாவரஉண்ணி, ஊண்உண்ணி டைனோசார்கள் அழிந்திருக்கலாம் என்பது போன்ற பல்வேறு கருத்துக்கள் கூறப்படுகின்றன. எவ்வாறாயினும் டைனோசார்கள் ஒரு அதிசயிக்க விலங்கினமே.

கன்னியாகுமரி அருங்காட்சியகத்திலுள்ள செப்புத் திருமேனிகள்

- நா. சௌந்திரபாண்டியன்
காப்பாட்சியர்,
அரசு அருங்காட்சியகம்,
கன்னியாகுமரி - 629 702.

"மாவட்டங்கள் தோறும் அருங்காட்சியகம்" என்ற தமிழ்நாடு அரசின் கொள்கைப்படி பத்தாவது மாவட்ட அருங்காட்சியகமாக 30.1.1991 அன்று மலர்ந்தது, கன்னியாகுமரி மாவட்ட அரசு அருங்காட்சியகம். இவ்வருங் காட்சியகம் ஒரு பல்நோக்கு மாவட்ட அருங்காட்சியகம் ஆகும்.

இவ்வருங்காட்சியகம் "காந்தி மண்டபம்" அருகில் அமைந்திருப்பது மற்றொரு சிறப்பம்சம்.

காண்பதற்குரிய காட்சிப் பொருட்களையும், கற்றுத் தேர்வதற்குரிய சிறப்பான கலைகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. மரத்தேர், மரச்சிற்பங்கள், கி.மு. ஐந்தாம் நூற்றாண்டு முதல் குசானர், குப்தர், சாளுக்கியர், இசுலாமியர், சோழர், பாண்டியர், விசய நகரத்தார், கிழக்கு இந்திய கம்பெனியார் வரை வெளியிட்ட நாணய மாதிரிகள், பண்டைத் தமிழர் பண்பாட்டை உணர்த்தும் இசைக்கருவிகள், போர்க்கருவிகள், எண்ணெய் வண்ண ஓவியங்கள், மலை வளம் கொஞ்சும் இரப்பர் தோட்டத்தின் அமைப்பும், பறவைப்புகலிடமும், புதர்க்காட்டின் சுற்றுச்சூழலும், முட்டத்தின் அழகும் இங்கு வனப்புற காட்சிகளாக அமைக்கப்பட்டுள்ளன.

இத்துணைச்சிறப்பும், பெருமையும் வாய்ந்த அருங்காட்சியகத்தில் செப்புத் திருமேனிகள் பல காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அவற்றினைப் பற்றி இக்கட்டுரை இயம்புகிறது.

கல்லில் சிலை செதுக்கிய மன்னர்கள் செம்பில் சிலை வார்க்கவும் செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கல்லில் செதுக்கப்பட்ட சிற்பமானது மூலஸ்தானத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு, அவ்விடத்தில் நிலைப்பெற்று அகற்ற முடியாதவாறு இருக்கும்.

திருவிழாக் காலங்களில் செம்பினால் வார்க்கப்பட்ட திருமேனியினை நகைகள் பூக்கள் இன்னும் பிற அலங்காரப் பொருட்களால் அலங்கரித்து வாகனத்தில் அல்லது தேரில் பொதுமக்களின் தரிசனத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இச்செப்புத் திருமேனிகளுக்கு "உற்சவ மூர்த்திகள்" என்ற மற்றொரு

பெயரும் உண்டு. அன்று உற்சவ மூர்த்தியாக இருந்தவைகளில் சில இன்று அருங்காட்சியகங்களை அழகுபடுத்துகின்றன.

திரிபுராந்தகர்:

அழிக்கும் கடவுள் எனக்குறிப்பிடும் சிவபெருமான் மூன்று அரக்கர்களான வித்தியுன்மாலி, கமலாக்ஷகன், தாரசாட்சன் என்பவர்களையும் அவர்கள் கட்டிய மூன்று கோட்டைகளையும் அழித்தவர் திரிபுராந்தகர் என மகாபாரதம் கூறுகிறது.

புறநானூறு "திரிபுராந்தகர் வில்லும்" அம்பும் ஏந்தியவர்" எனவும், கலித்தொகை மூன்று கோட்டைகளையும் அழித்தவர் எனவும் கூறுகின்றது.

மேல்க்கையில் மானும், மழுவும் பிடித்தவாறும், கீழ்க்கரங்கள் இரண்டும் வில்லையும், அம்பையும் ஏந்தியவாறும் சித்தரிக்கப்பட்டுள்ளார் திரிபுராந்தகர்.

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில், நடுவர் நீதிமன்றம் மூலம் கிடைக்கப்பெற்ற இவ்வரிய திருமேனி கி.பி. 13 ஆம் நூற்றாண்டை சார்ந்தது.

திரிபுரசுந்தரி:

நாகர்கோவில் நடுவர் நீதிமன்றம் மூலம் பெறப்பட்ட 108 செ.மீ. உயரமுள்ள செப்புத் திருமேனி "தேவி" என அடையாளம் காட்டப்பட்டு காட்சியில் இடம் பெற்றுள்ளது. திரிபுராந்தகர் என்ற சிவனின் படிமத்துடன் ஒன்றாக கிடைத்தமையால் இதனைச் சைவப் படிமமாக ஏற்று கி.பி. 13 ஆம் நூற்றாண்டு என வரையறை செய்து "திரிபுரசுந்தரி" என அழைக்கப்படுகிறாள்.

நடராசர்

நடன கோலத்திலுள்ள சிவபெருமான் நடராசர் எனவும், ஆடல் வல்லான் எனவும் குறிப்பிடப்படுகிறார். இத்திருமேனி இல்லாத ஆலயம் தமிழகத்தில் இல்லையெனக்கூறலாம். இவ்வருங்காட்சியகத்தில் கன்னியாகுமரி மாவட்டம் தோவாளையிலிருந்தும், மற்றொன்று தஞ்சை மாவட்டம் சிலத்தூர் என்ற இடத்தில் கிடைத்த இரு செப்புத் திருமேனிகள் காட்சியில் இடம் பெற்றுள்ளன. இவை முறையே கி.பி. 13 மற்றும் 16ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும்.

நூற்றியெட்டு சிவ தாண்டவங்களில் ஆனந்த தாண்டவம், சிறப்பான இடத்தை வகிக்கின்றது. மேல் வலது கையிலுள்ள உடுக்கையின் சத்தத்தின் மூலம் உலகிலுள்ள உயிர்களைப்படைப்பதாகவும் மேல் இடக்கையிலுள்ள தீப்பிழம்பு உயிர்களிடம் உள்ள மாசுகளை நீக்கி தூய்மைபடுத்துவதாகவும், கீழ் வலது கை அபய முத்திரை பாதுகாப்பு அளிப்பதாகவும், கீழ் இடது கை கீழ் நோக்கி அமைக்கப்பட்டிருப்பது தன்னிடம் வருபவர்களுக்கு மனதிலுள்ள

அறியாமையை அகற்றி முக்தி தருவதாகவும் சித்தரிக்கப்படுகிறது. நடராசரின் காலின் அடியிலுள்ள "முயலகன்" என்னும் உருவம் தீங்கு செய்பவர்களை அழிப்பார் எனவும் தெளிவுபடுத்தப்படுகிறது. சிவபெருமானின் தலையிலுள்ள பிறைச்சந்திரன் மனிதனின் அறிவு வளர்தல், தேய்தல் ஆகியவற்றினைக் குறிப்பிடுவதாகவும் உள்ளது. காலில் சலங்கை கட்டியவராகவும் புலித்தோல் அணிந்தவராகவும் திருமேனி வடிவமைக்கப்பட்டுள்ளது.

சிவபெருமான் நடன கோலத்திலுள்ள பொழுது அருகில் இருக்கும் பார்வதி "சிவகாமி" என அழைக்கப்படுகிறாள்.

சோமாஸ்கந்தர்

முருக பெருமானின் வடிவமைப்புகளில் ஒன்றாகும். சிவனும், பார்வதியும் அமர்ந்திருக்க இடையில் நின்றபடியோ, அமர்ந்த படியோ ஸ்கந்தன் அமைக்கப்படுவது சோமாஸ்கந்தர். "சோ" என்றால் சிவனும், "உமா" பார்வதியையும், "ஸ்கந்தர்" என்றால் முருக பெருமானையும் குறிக்கும்.

காட்சியிலுள்ள திருமேனி தஞ்சை மாவட்டம் உதயமார்த்தாண்டபுரத்தைச் சேர்ந்தது. காலம் கி.பி. 16ஆம் நூற்றாண்டு. சிவனும், பார்வதியும் அமர்ந்திருக்க இடையில் ஸ்கந்தன் நின்று இருக்கலாம் எனத் தோன்றும் வண்ணம் இரு கால்களின் பாதங்கள் மட்டும் உள்ளன. முழு உருவம் உடைந்துள்ளதற்கான அடையாளம் காணப்படுகிறது. செவ்வக வடிவத்திலுள்ள பீடத்தில் தாமரை மலர்களால் அமைக்கப்பட்ட பீடத்தில் இச்சிலை வடிவமைக்கப்பட்டுள்ளது.

மாணிக்கவாசகர்

தஞ்சை மாவட்டம் மன்னார்குடி தாலுகா குன்னியூர் என்ற இடத்திலிருந்த கி.பி. 13 ஆம் நூற்றாண்டின் கலை அம்சத்தை விளக்கும் திருமேனி மாணிக்க வாசகர் ஆகும்.

மாணிக்க வாசகர் அறுபத்து மூன்று நாயன்மார்களில் குறிப்பிடத்தக்கவர். தன் இருகைகளிலும் சுவடிகளை வைத்துள்ளவாறும், உபதேசம் செய்வதனைப் போலவும் வார்த்து இருப்பது குறிப்பிடத்தக்கது.

கி.பி. 9ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இவர் மதுரை மாவட்டம் திருவாதவூரில் பிறந்து வரகுண பாண்டியன் என்ற மன்னரின் அமைச்சராய் பணிபுரிந்தவர். "திருவாசகம்" என்ற பக்தி நூலையாக்கியவர். இந்நூல் "திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்ற உயர்நிலை உடையது.

சீனிவாசர்

நின்ற, அமர்ந்த, படுத்த நிலையில் வடிவமைப்பது விஷ்ணுவின் சிறப்பு அம்சமாகும்.

இவர் தம் மேல் கரங்கள் சங்கு, சக்கரம் ஏந்தியவாறும், கீழ் வலது கையில் "கதைவும், இடது கையை தம் முழங்காலில் வைத்துள்ளவாறு கலை அம்சத்துடன் அமைக்கப்பட்டிருப்பதால் "சீனிவாசர்" என அழைக்கப்படுகிறார். காலம் கி.பி. 15ஆம் நூற்றாண்டு.

இத்திருமேனி திருச்சி மாவட்டம் லால்குடி வட்டம், வீரகளூர் இடத்திலிருந்து பெறப்பட்டதாகும். சீனிவாசகருக்கு வலப்புறத்தில் லட்சுமி நின்றிருப்பது சிறப்பு அம்சமாகும். லட்சுமி ஸ்ரீதேவி என அழைக்கப்படுகிறாள்.

இராமர்

இராமர் "இராமாயணம்" இதிகாசத்தில் இடம் பெறும் கதாநாயகர். தன் இரு கரங்களிலும் வில்லும், அம்பும் ஏந்தியவாறு உள்ளது. மேலும் இராமர் செப்புத் திருமேனியினை உருவாக்கும்போது இராமர், இலட்சுமணன், சீதை என மூன்று படிமங்களையும் ஒரு சேர வடிவமைப்பது மரபாக கொள்ளப்படுகிறது. ஆனால் இங்கு இராமர் தனிநிலையில் உள்ளார்.

காட்சியில் இடம் பெற்றிருக்கும் இத்திருமேனி குழுமூர் ஆவுடையார் தாலுகா, புதுக்கோட்டை மாவட்டத்தைச் சேர்ந்தது. இத்திருமேனி விஜயநகர் மன்னர்கள் ஆட்சி செய்த கி.பி. 15ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டது என ஆடை, ஆபரணங்கள், உருவ அமைப்பு ஆகியவற்றினைக் கொண்டு கணக்கிடப்படுகிறது.

பாலகிருஷ்ணன்

விஷ்ணுவின் அவதாரங்களில் எட்டாவது அவதாரமான கிருஷ்ணன் அவதாரத்தின் ஒரு பிரிவு பாலகிருஷ்ணன். கிருஷ்ணர் குழந்தை வடிவத்தில் கையில் வெண்ணெய் ஏந்தியவாறு நடனமாடும் கோலத்தில் காட்சியளிக்கிறார். வலது மார்பிலுள்ள மச்சம்போன்ற இருப்பதனைக் கொண்டு பாலகிருஷ்ணர் என்பது தெளிவாகிறது.

வீரகலூர், லால்குடி வட்டம், திருச்சி மாவட்டத்தில் இத்திருமேனி கிடைத்துள்ளது. காலம் கி.பி. 15ஆம் நூற்றாண்டு.

திருமங்கை ஆழ்வார்

பன்னிரு ஆழ்வார்களில் ஒருவர். பல்லவ மன்னன் இரண்டாம் நந்தி வர்மன் காலத்தைச் சேர்ந்தவர். காலம் கி.பி. 8ஆம் நூற்றாண்டு. இவர் கள்ளத் தொழிலில் ஈடுபட்டு, இறை அருள் கிடைக்கப்பெற்று இறைவனுக்குத்

தொண்டு செய்யும் உயர் பண்பினைப் பெற்றார். இவரை ஒரு போர்த்தளபதி போலவும், போர் வீரன் போலவும் சித்தரித்துக்காட்டுவது கலை அம்சமாகும். இங்கு ஆழ்வார் போர் வீரனாக காட்சி அளிக்கிறார். கையில் போர் ஆயுதங்கள் ஏந்தியவாறு சித்தரிக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள திருமேனி வேலூர் மாவட்டம் அரக்கோணம் வட்டம், திருவேலங்காட்டைச் சேர்ந்ததாகும். பிற்கால சோழர்களான பராந்தகன், இரண்டாம், மூன்றாம் குலோத்துங்க சோழனின் காலமாகிய கி.பி. 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகும். இக்காலத்தில் கலைக்குப்புத்துயிர் ஊட்டப் பெற்றுச் செப்புத் திருமேனிகள் அதிக எண்ணிக்கையில் உருவாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

காண்பதற்குரிய செப்புத் திருமேனிகளைக் கண்டு களிப்பதற்கும், கற்றுத் தெளிவதற்கும், நீலத்திரைக் கடலோரத்தில் நித்தம் தவம் செய் தென் குமரி அரசு அருங்காட்சியகத்திற்கு அன்புடன் அழைக்கிறோம்.

திருநெல்வேலி அருங்காட்சியகத்தில் ஓவியக் கண்காட்சி

- சே. கிருஷ்ணம்மாள்

காப்பாட்சியர்,
அரசு அருங்காட்சியகம்,
திருநெல்வேலி.

திருநெல்வேலி அரசு அருங்காட்சியகத்தில் 20.6.97 அன்று புகழ்பெற்ற தஞ்சாவூர் ஓவியங்களின் ஓவியக் கண்காட்சி மனோண்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர், முனைவர் கே. சதாசிவன் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. ஓவியக் கண்காட்சியில் பாளையங்கோட்டையைச் சேர்ந்த ஓவியர் திருமதி. வசந்த லட்சுமி அவர்களின் புகழ்பெற்ற தஞ்சை ஓவியங்கள் இடம் பெற்றன. கடந்த இரண்டு ஆண்டுகளாக தஞ்சாவூர் ஓவியங்களைப் புதுமையான முறையில் தீட்டுவதில் அவர் ஆர்வம் காட்டி வருகிறார். பக்தி சிரத்தையுடன் வரைந்த இந்த தஞ்சை ஓவியங்களைத் தங்களுடைய வீட்டில் கண்காட்சியாக அவர்கள் வைத்துள்ளார்.

தஞ்சாவூர் ஓவியங்கள்:

300 ஆண்டுகளுக்கு முன் தஞ்சாவூர் ஓவியங்களைத் தீட்டும் பழக்கம் பக்தி இயக்கமாகத்தான் உருவாகியது. அப்போது கடவுள்களை மட்டுமே ஓவியங்களாகத் தீட்டி வந்தனர். தஞ்சாவூர் ஓவியக்கலைஞர்கள் தங்களது அளவு கடந்த பக்தியினால் கடவுளர் படங்களுக்குத் தங்க ரேக்குகள் ஒட்டி, கற்கள் பதித்து அலங்காரம் செய்து மகிழ்ந்தனர். இந்த வகை அலங்காரமே அந்த ஓவியங்களுக்கு உயிரோட்டத்தை ஏற்படுத்தியதால் அவை உலகப் புகழ்பெற்றன. தஞ்சாவூர் ஓவியங்களுக்கு உரிய புகழுக்கு காரணம், அதன் விலை உயர்ந்த கற்களும், புஷ்பராகங்களும் அதில் பதிக்கப்பட்டிருப்பதே. புகழ் பெற்ற தஞ்சை ஓவியங்களைத் தஞ்சை பிரகதீஸ்வரர் கோயிலிலும் சிதம்பரம் கோயிலிலும் காணலாம். இப்பொழுது இந்த ஓவியக்கலையானது பல கலைக்கூடங்களில் புதுவிதமான முறைகளுடன் கற்றுக் கொடுக்கப்படுவதால் இந்த ஓவியங்களுக்குச் சிறப்பு இன்னும் கூடியுள்ளது.

தஞ்சை ஓவியங்களில் புதிய உத்திகளைக் கையாளுதல்

பாளையங்கோட்டையைச் சேர்ந்த திருமதி. வசந்த லட்சுமியும் அவருடைய வாரிசுகளும் (மூன்று மகள்களும்) தங்களுடைய சொந்த முயற்சியினால் புதுவிதமான முறைகளைக் கையாண்டு தஞ்சாவூர் ஓவியங்களைத் தீட்டி வருகின்றார். எனினும், பழைய பாணியில் சிறிதும் மாற்றம் செய்யாமல் புடைப்பு ஓவியம் எனச் சொல்லப்படும் நுணுக்கமான

பணியைச் செய்யும்போது அது எக்காலத்திற்கும் உறுதியாக இருக்கும் வகையில் "எம்சில்" எனப்படும் செயற்கைப் பசையை பயன்படுத்துகின்றார். இது வழக்கமாகப் பயன்படுத்தப்படும் "பிரெஞ்ச் சாக்பௌடர்" மற்றும் "கம்அராபிக்கை" விட உறுதியானது. நீர் பட்டாலும் அழியாமல் இருக்க "அக்ரைலிக்" வண்ணங்களையும் இவர் பயன் படுத்துகின்றார்.

ஓவியங்களின் தங்கரேக்குகள், கற்கள் ஆகியவை விழுந்து விடாமல் இருக்க உறுதியான பசையைப் பயன்படுத்துகின்றார். அவற்றைப் பதிக்கும் முறையிலும் மாற்றம் செய்துள்ளார். ஓவியங்களும், தங்க ரேக்குகளும் எத்தனை காலமானாலும் மங்கிவிடாமலும், பூச்சிகள் அரிக்காமலும் இருக்க பாதுகாப்பான சிறப்பான திரவத்தையும் பயன்படுத்துகின்றார். ஓவியங்கள் தீட்டப் பயன்படுத்தப்படும் பலகைகளும் பூச்சிகள் அரிக்காமல் இருக்கும் வகையில் உயர்ரக "நூ உட்" எனப்படும் பலகைகளை பயன்படுத்துகின்றனர். இந்த ஓவியக் கண்காட்சியில் ஸ்ரீபாலாஜி, வெங்கடாசலபதி ரத்னக் கவசம், ஸ்ரீவிட்டலன், தர்பார் கிருஷ்ணர், மகாலெஷ்மி, சிருங்கேரி சாரதா, விக்னேஷ்வரர் போன்ற தஞ்சாவூர் ஓவியங்களும், பறவை, பிள்ளையார், ரதி, ராதையுடன் கிருஷ்ணர் போன்ற "பாலிதீன் ஷீட்டு"களில் வரைந்த ஓவியங்களும் இடம் பெற்றுள்ளன.

இது தவிர கண்ணாடிகள், "பாலிதீன் ஷீட்டு"களிலும் இவர்கள் ஓவியங்களைத் தீட்டுகின்றார். ஆனால் இவற்றில் ஓவியங்களைத் தீட்டும் போது தவறு நேர்ந்தால் அவற்றைத் திருத்துவது கடினம். எனினும் இதிலும், இவர் கைதேர்ந்தவர்களாக இருக்கின்றார். இவ்வாறு அவர் இத்தொழிலில் ஈடுபடும் போது ஆத்ம திருப்தி இருப்பதாக கூறுகின்றார். ஆயக்கலைகள் அறுபத்தி நான்கில் நுண்கலைகள் ஐந்து. அவை ஓவியம், சிற்பம், சங்கீதம், சாகித்யம், நடனம். அந்த நுண்கலைகளிலும் ஓவியத்திற்கே முதலிடம் அளிக்கப் பெற்றுள்ளது. ஓவியக்கலை மட்டும் தான் மற்ற கலைகளின் துணையின்றி நிற்கும்.

கோயில் மாநகரமாகிய திருநெல்வேலி கலைகளுக்குப் பெயர் பெற்றது. இத்தகைய கலைகளுக்குப் பெயர் பெற்ற நகரில் பாளையைச் சேர்ந்த திருமதி. வசந்தலெஷ்மியின் குடும்பத்தினர் ஓவியக் கலைக்கு தங்களை அர்ப்பணித்து அனுதினமும் ஓவியத்தைப் பற்றிய சிந்தனையுடன் பல அரிய அழகிய படைப்புகளை உருவாக்கி வருகின்றனர். ஓவியக்கலை பாதுகாக்கப்பட வேண்டிய கலை. அவர்களது அரிய படைப்புகளை இவ்வருங்காட்சியகத்தில் பொதுமக்கள் கண்டுகளிக்க ஒரு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு ஆயிரக்கணக்கில் மாணவர்களும், பொதுமக்களும், தஞ்சை ஓவியங்களைக் கண்டு களிக்கின்றனர்.

சென்னை அரசு அருங்காட்சியகம் ஆராய்ச்சி மையமாகிறது

- முனைவர் நே. தேவசகாயம்,
துணை இயக்குநர்,
அரசு அருங்காட்சியகம்,
சென்னை - 600 008.

சென்னை அரசு அருங்காட்சியகம் 1851-இல் 1100 புவியியல் பொருட்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. இன்று தொல்பொருளியல், மானிடவியல், நாணயவியல், கலை, புவியியல், விலங்கியல், தாவரவியல் மற்றும் சிறுவர் அருங்காட்சியகச் சேகரிப்புப் பிரிவுகளையும் வேதியியப் பாதுகாப்பு, கல்வி, காட்சியமைப்பு ஆகிய செயலாக்கப் பிரிவுகளையும் உள்ளடக்கிய ஒரு பல்நோக்கு அருங்காட்சியகமாக இயங்கி வருகிறது.

ஆயிரக்கணக்கான அரும்பொருட்களையும், பண்பாடு, கலை, அறிவியல் தொடர்பான பொருட்களையும் சேகரித்து, பாதுகாத்து அவற்றின் மீது ஆய்வுகள் மேற்கொண்டு நூல்கள், கட்டுரைகள் வெளியிட்டு வருகிறது. காப்பாட்சியர்கள் மற்றும் அருங்காட்சியக அலுவலர்களே ஆய்வுகள் மேற்கொள்வதோடன்றி ஆய்வாளர்களுக்கும் ஆய்விற்கான அனைத்து உதவிகளும் கொடுக்கப்பட்டு பலர் முனைவர் பட்டமும் பெற்றுள்ளனர்.

சென்னை அருங்காட்சியகம் இதுவரை 190 நூல்களை வெளியிட்டுள்ளது. இவ்வருங்காட்சியக வெளியீடுகள் பன்னாட்டுப் பெருமை பெற்றவை. வெகுகாலம் அரையாண்டுச் செய்தி மலராக வெளியிடப்பட்டு வந்த செய்தி மலர் காலாண்டுச் செய்தி மலராகவும் ஏப்ரல் முதல் அருங்காட்சியக மலராகவும் வெளியிடப்பட்டு வருகிறது.

ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டிய அநேகப் பகுதிகள் இவ்வருங்காட்சியகத்தில் உள்ளன. பெரும்பாலான அரும்பொருட்கள் மீதும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பல்வேறு நிறுவனங்கள் அருங்காட்சியகப் பொருட்கள் மீது ஆய்வுகள் மேற்கொள்ள அருங்காட்சியக நிர்வாகத்தை அணுகி வருகின்றனர்; பல்வேறு ஆய்வுப் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

மேலும், சில ஆய்வுப் பணிகளில் ஆய்வாளர்களை ஈடுபடுத்தும் வண்ணம் சென்னைப் பல்கலைக் கழகம் சென்னை அரசு அருங்காட்சியகத்தை ஆய்வு நிறுவனமாக அங்கீகரிக்கக் கேட்டபோது சென்னைப் பல்கலைக்கழகம் ஒரு மூவர் குழுவினை அனுப்பியது. அம்மூவர் குழு, கடந்த மார்ச் திங்களில் சென்னைப் பல்கலைக் கழகத் தொல்லியல் துறைப் பேராசிரியர் முனைவர் எஸ். குருமூர்த்தி, வரலாற்றுத் துறைப் பேராசிரியர் முனைவர் பி. ஜெகதீசன்,

பச்சையப்பன் கல்லூரி தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் தெ. ஞானசுந்தரம் ஆகியோர் அடங்கிய பல்கலைக் கழகக் குழு சென்னை அரசு அருங்காட்சி யகத்தை முனைவர் பட்டத்திற்கான ஆய்வுகள் நடத்தும் ஒரு ஆராய்ச்சி மையமாக அங்கீகரிக்க போதுமான வசதிகள் உள்ளனவா என்று ஆய்வு செய்து அறிக்கையினைப் பல்கலைக்கழகத்திற்கு அளித்ததின் பேரில், சென்னைப் பல்கலைக் கழக சிண்டிகேட் 12.6.1997 நடைபெற்ற கூட்டத்தில் சென்னை அரசு அருங்காட்சியகத்தை ஆய்வு நிறுவனமாக ஒப்புதல் அளித்தது.

பல்கலைக் கழக அனுமதியின்படி சென்னை அரசு அருங்காட்சியகத் திலுள்ள மானிடவியல் மற்றும் வேதியியப் பாதுகாப்புப் பிரிவுகள் முதல்கட்டமாக ஆராய்ச்சி மாணவர்களை வழி நடத்தத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன. மானிடவியல் பிரிவில் முனைவர் பட்டத்திற்கான அருங்காட்சியகப் பொருட்கள் சார்ந்த ஆராய்ச்சி மேற்கொள்ள விரும்புவோர் அருங்காட்சியகங்களின் துணை இயக்குநர் முனைவர் நே. தேவசகாயம் அவர்களையும் வேதியியப் பாதுகாப்பு தொடர்பான ஆராய்ச்சி மேற்கொள்ள விரும்புவோர் முனைவர் வே. ஜெயராஜ் அவர்களையும் அணுகி ஆலோசனை பெறலாம்.

சென்னை அரசு அருங்காட்சியகத்தில் முனைவர் பட்டத்திற்கான ஆய்வுகள் மேற்கொள்ள விரும்புவோர் அருங்காட்சியகங்களின் ஆணையர், அரசு அருங்காட்சியகம், சென்னை - 600 008 என்ற முகவரிக்கு அவர்களது கல்வித் தகுதி, ஆராய்ச்சி மேற்கொள்ள விரும்பும் சரியான தொகுதி, வெளியீடுகள் போன்ற விவரங்களுடன் விண்ணப்பிக்கலாம். அத்துடன் சென்னைப் பல்கலைக்கழகத்தில் அவர்களது பெயர்களைப் பதிவு செய்ய விண்ணப்பப்படிவமும் பெற்றுக் கொள்ள வேண்டும்.



புகைப்படப் பகுதி

2-6-97-ல் பயிற்சிகளைத்தொடங்கி வைத்து மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப்பண்பாடு, இந்துசமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அருங்காட்சியக மலர் வெளியிட, தமிழ்வளர்ச்சி-பாண்பாட்டுத்துறைச் செயலாளர் திரு. வை. பழனிச்சாமி, இ.ஆ.ப., மலரைப் பெறுகிறார் திரு.கண். தீனதயாளன், இ.ஆ.ப. அருங்காட்சியகங்களின் ஆணையர் திரு. ச. இராமலிங்கம், இ.ஆ.ப., கல்லூரிக்கல்வி இயக்குநர் மற்றும் பேராசிரியர். திருமதி. இராணி கந்தசாமி உடனிருக்கின்றனர்.

இராமாயணக் கண்காட்சியை 3-4-97ல் அருங்காட்சியகங்களின் ஆணையர் திரு. கண். தீனதயாளன், இ. ஆ. ப., தொடங்கி வைத்து உரை. உடனிருப்பவர்கள் திருமதி. விஜயலட்சுமி, திரு. ம. மோகன் பி. எல். நரசிம்மமூர்த்தி, முனைவர் நே. தேவசகாயம்.

மதுரை அருங்காட்சியகத்தில் விலங்கியல் கண்காட்சியை அருங்காட்சியகங்களின் ஆணையர் திரு. கண். தீனதயாளன், இ.ஆ.ப., தொடக்கி வைக்கிறார்.



வேதியியப் பாதுகாப்பு மற்றும் ஆராய்ச்சி ஆய்வகத்தில் நடந்த புத்தொளிப்பயிற்சியில் பயிற்சியாளர்களின் பணி.

தஞ்சாவூர் ஓவியக்கண்காட்சி, அரசு அருங்காட்சியகம், திருநெல்வேலி

அம்மோனைட் புதைபடிவம்

அம்மிக்கல், அப்புக்கல், வேலூர் வட்டம், வேலூர் மாவட்டம்
கி. பி. 9-ஆம் நூற்றாண்டு



தாவர இலையின் புதைபடிவம்
குளோசாப்டெரிஸ் இண்டிகா, ஆங்கோல் மாவட்டம், ஒரிசா
(பிற்கால பெர்மியன்)

தஞ்சாவூர் ஓவியம், தர்பார் கிருஷ்ணர்
கண்காட்சி-அரசு அருங்காட்சியகம், திருநெல்வேலி.

வேலூர் அமிர்தி யானையின் எலும்புகளுக்கு வேதியியப்
பாதுகாப்பளித்தல்

முன்புறம்
பாஸ்டினா-1

பின்புறம்
மயில்
விட்டம் : 1.9 செ.மீ. எடை : 7:06 கிராம்

முன்புறம்
மன்னர் மார்கஸ் அரோலியஸ்

பின்புறம்
திருநிலைப்பாடு கட்டடம்

விட்டம் : 21 செ. மீ. ,எடை : 7.38 கிராம்

முன்புறம்
பாஸ்டினா-1

பின்புறம்
மயில்

விட்டம் : 20 செ.மீ. எடை : 7.17 கிராம்

குளிர்காலத் தோற்றம் (படிமம்)
கே. பி. ராய் சௌத்ரி, தற்காலம்

நடராசர் (படிமம்)
கூரம், செங்கல்பட்டு (மா) கி. பி. 9-ம் நூற்றாண்டு